REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மே 5 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 105 | Friday 05, May, 2023 | 12 பக்கங்கள் | 50/-

## A/L விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விரிவுரையாளர்கள் தயார்
### சம்மேளனம் நேற்று அறிவிப்பு

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட தாம் தயாரென பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் நடைபெற்ற விசேட கலந்துரையாடலையடுத்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நடத்த எதிர்ப்பார்த்துள்ள

04

பொருளாதார நெருக்கடிகள், இன்னல்களைக் களைய
## கௌதம புத்தரின் தத்துவங்கள் எமது நாட்டை நல்வழிப்படுத்தும்



புத்தம், தம்மம், சங்கம் என்ற மும்மணிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட வெசாக் பௌர்ணமி தினம், பௌத்த நாட்காட்டியின் மிக முக்கிய தினமாக உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வெசாக் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்நன்னாள், கௌதம புத்த பெருமானின் பிறப்பு, ஞானம் பெறல், பரிநிர்வாணத்தின் புனித நிகழ்வுகளை நினைவுபடுத்துகின்றன. இத்தினத்தில் மனிதநேயம் மற்றும் கருணையுடன் கூடிய அறப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் கௌதம புத்தரின் போதனைகளுக்கு மரியாதை செலுத்துவதற்கான வாய்ப்பு உருவாகிறது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்து வரும் இந்த சவாலான நேரத்தில், காலத்தால் அழியாத கௌதம புத்தரின் தத்துவம் ஆறுதலுக்கான

04

## தேசிய மத நல்லிணக்கத்துக்கு புத்தரின் சிந்தனைகள் எடுத்துக்காட்டு



வரலாறு நெடுகிலும் பௌத்த மதத்திலிருந்து நாம் பெற்ற ஒழுக்க விழுமியங்கள் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகித்ததுடன், உலகில் பெருமையுடன் எழுந்து நிற்கவும் உதவியதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். வெசாக் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகின் இயல்பை சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவும் பௌத்தத்தின் வழியை, இன்று முழு உலகமும் பின்பற்றுவதற்கான தேவை எழுந்துள்ளது. பௌத்த விழுமியங்களைச் தேடிச் செல்லும் நாடுகள் இதற்காக பௌத்த நாடுகளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றன. உலக வாழ்வொழுங்கில் மனித வாழ்க்கை முறை வீழ்ச்சி கண்டு வரும் சூழலில், அவர்கள் பௌத்த மதத்தின் விழுமியங்களைத் தேடுகிறார்கள்.

பௌத்த மதம் காட்டும் முறையான முகாமைத்துவமானது இன்று நாம் எதிர்நோக்கும் நெருக்கடி

04






கொழும்பு, ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையினால் வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்த ரஷ்மி; வெசாக் வலயத்தை (03) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார். தெற்காசிய தூதரகங்களின் பங்களிப்புடன் அங்கு நிர்மாணிக்கப்பட்ட பௌத்த பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையிலான கண்காட்சி கூடங்களை ஜனாதிபதி பார்வையிட்டபோது.

2022 இல் 142 பில். ரூபாவாக இருந்த தொகை 45 பில். ரூபாவால் அதிகரிப்பு
# நலன்புரி செயற்பாடுகளுக்கு 187 பில்லியன் ரூபா ஒதுக்கீடு
### இவ்வருடத்துக்கும் ஒதுக்குமாறு IMF அரசுக்கு அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சமுர்த்தி, விசேட தேவையுடையோர், சிரேஷ்ட பிரஜைகள், சிறுநீரக நோயாளர்கள் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு வலயமைப்புக்காக இவ்வருடம் குறைந்தபட்சம் 187 பில்லியன் ரூபா நிதியை பயன்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு இதற்காக அரசாங்கம் 142 பில்லியன் ரூபாவை மாத்திரமே செலவிட்டுள்ளது. இந்த வருடத்தில் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேலதிகமாக 45 பில்லியன் ரூபாவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நலன்புரி பிரதிபலன்களை குறைக்காமல், முன்னர் இருந்ததையும் விட அதிகமாக பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் என்ற வகையில் பணிப்புரைகளை வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.



சமுர்த்தி, விசேட தேவையுடையோர், சிரேஷ்ட பிரஜைகள், சிறுநீரக நோயாளர்கள் உள்ளிட்ட சமூக பாதுகாப்புக்கு இந்நிதி பயன்பாடு

04

## இலங்கையை மீண்டும் செழிப்பான பாதையில் கொண்டு செல்ல முடியும்
### IMF ஆசிய பசுபிக் இயக்குநர் கிருஸ்ணா ஸ்ரீனிவாசன்

இலங்கையை செழிப்பான பாதையில் மீண்டும் கொண்டுசெல்ல முடியுமென சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஆசிய பசுபிக் நாடுகளின் பொருளாதார நிலை குறித்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த, சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய பசுபிக் நாடுகளுக்கான பணிப்பாளர் கிருஸ்ணா ஸ்ரீனிவாசன் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு முக்கிய பிரச்சினையுள்ள நாடென அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை அடிப்படையாகக் கொண்ட திட்டம்

04

## நவீன உலகத்துக்கு ஏற்றவாறு விரைவில் புதிய தொழில் சட்டம்
### தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்க விசேட ஏற்பாடு



பல ஆண்டுகாலம் பழமைவாய்ந்த நாட்டின் தொழில் சட்டத்துக்குப் பதிலாக, நவீன உலகத்துக்கு ஏற்பவும், தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் புதிய தொழில் சட்டம் தயாரிக்கப்படவுள்ளதாக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் (03) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில், கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2048 ஆம் ஆண்டில் வெற்றி பெறுவோம் என்ற ஜனாதிபதியின் தொலை நோக்குடன், நாட்டின் அபிவிருத்தி இலக்குகள்

04



சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா; ஜனாதிபதி பிரிட்டன் பயணமானார்

03



புத்த பெருமானின் போதனைகளை பின்பற்றி நாட்டை முன்னேற்றுவோம்

03

## தேசிய கொள்கை ஆணைக்குழு சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில்
### உப குழுவின் தலைவர் நாமல்



தேசியக் கொள்கை ஆணைக் குழுவை நிறுவுவதற்கான வழிகாட்டல்கள் தொடர்பில், தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சம்பந்தப்பட்ட சகல தரப்பினர், பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று

04

யாழ். தையிட்டி விஹாரை அமைப்பு விவகாரம்
## அத்துமீறல்கள் இடம்பெற்றிருப்பின் ஏற்றுக்கொள்ள இடமளியேன்
### ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டுவருவேன் –டக்ளஸ்



யாழ். வலி வடக்கு தையிட்டி விஹாரை விவகாரம் தொடர்பான ஆவணங்களை ஆராயவுள்ளதுடன் அதனை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அத்துமீறல்கள் இடம்பெற்றிருக்குமாயின் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தைத் தொடர்ந்து (04) நடைபெற்ற ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில், சிறிய விஹாரைகள்

04

வலி வடக்கு தையிட்டி விஹாரை விவகாரம்;
## சுமந்திரன், மாவை கடும் எதிர்ப்பு வெளியீடு
### பொலிஸாரால் நேற்று ஐவர் கைது



யாழ்ப்பாணம் வலி.வடக்கு தையிட்டி விஹாரையை அகற்றக் கோரி முற்றுகைப் போராட்டம் நடத்தி வரும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டவர்களை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், மற்றும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சேனாதிராஜா

04

## செயற்கை விபத்தில் மனைவியை கொன்று காப்புறுதி பணத்தை அபகரிக்க முயன்றவர் கைது
### ரூ.20 இலட்சம் கொடுத்து விபத்தை ஏற்படுத்தியமையும் கண்டு பிடிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

மனைவியின் ஆயுள் காப்புறுதி பணத்தை பெற்றுக் கொள்வதற்காக செயற்கை விபத்தின் மூலம் மனைவியை படுகொலை செய்த குற்றச்சாட்டில் 24 வயது நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனைவியை படுகொலை செய்வதற்காக அவர், தமது நண்பனை பயன்படுத்தியுள்ளதுடன் 20 இலட்சம் ரூபா பணத்தையும் வழங்கி வாடகைக்கு வாகனத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளார். இந்த வாகனத்தால், தனது மனைவியை மோதி விபத்தை ஏற்படுத்துமாறு நண்பனிடம் அவர் தெரிவித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த ஏப்ரல் (30) எல்பிட்டி பிட்டிகல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

04

## புதிய திரிபுடனான டெங்கு பரவல் நாட்டில் அதிகரிப்பு
### பொதுமக்களுக்கு எச்சரிக்கிறார் சந்திம ஜீவந்தர

லோரன்ஸ் செல்வநாயகம்



டெங்கு பரவல் வேகம் அதிகரித்து வருவதால் புதிய திரிபுடனான டெங்கு நோய் மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஜீவ வாயு பீடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இதனைக் கவனத்திற்கொண்டு செயற்படுமாறு மக்கள் பணிக்கப்பட்டுள்ளனர். மேலும், டெங்கு நுளம்பு

04

## ரூ.50,000 இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் கைது
### இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிரடி



50,000 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமன, பிரதேசத்தில் வசிக்கும் ஒருவருக்கு எதிராக அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குக்கு தொடர்பில் சாதமாகச் செயற்படுவதற்காகவே இந்த இலஞ்சம் கோரப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்ட்

04

## வெசாக் தினத்தையிட்டு கைதிகளை சந்திக்க இரண்டு நாட்கள் சலுகை

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறை கைதிகளை சந்திப்பதற்கு, அவர்களது உறவினர்களுக்கு இரண்டு நாட்கள் விசேட சந்தர்ப்பம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இன்று (05) மற்றும் நாளை (06) ஆம் திகதிகளில் இவ்வாறு சிறைக்கைதிகளை சந்திக்க சந்தர்ப்பம் வழங்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

கைதிகளின் உறவினர்கள் கொண்டு வரும் உணவு மற்றும் இனிப்புப் பொதிகளை கைதிகளுக்கு வழங்கவும் அனுமதிக்கப்படவுள்ளது.

04

## யாழ். நகரிலிருந்து துபாய்க்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி




நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்திலிருந்து துபாய்க்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் அறிமுக நிகழ்வு புதன்கிழமை (03) நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நிலாவரைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வாழைக்குலை பதப்படுத்தல் நிலையத்தில், இந்நிகழ்வு நடைபெற்றது. யாழ். குடாநாட்டில் கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுகளில்

04

# 'புத்த ரஷ்மி' வெசாக் வலயம் ஜனாதிபதியினால் திறந்துவைப்பு











கொழும்பு, ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையினால் வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஏற்பா டு செய்யப்பட்டிருந்த 'புத்த ரஷ்மி' வெசாக் வலயம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் (03) ஆரம்பமானது.

வெசாக் நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தை குறிக்கும் வகையில், ஜனாதிபதி, மின்விளக்கு அலங்காரங்களை திறந்து வைத்தார். அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கங்காராம விகாரைக்கு சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தெற்காசிய தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த வெசாக் வலயத்தில் பௌத்த பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்நாடுகளால் கண்காட்சி கூடங்களும் உருவாக்கப்பட்டிருந்தன.

கங்காராம விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கங்காராம விகாரையின் விகாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரரின் ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, புத்த ரஷ்மி வெசாக் வலயத்தை பார்வையிட வந்திருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பக்தர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிநேகபூர்வ கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியுடன் சபாநாயகர் உட்பட அமைச்சர்கள், ஜனாதிபதியின் ஆலோசகர்கள் உட்பட வெளிநாட்டு தூதுவர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**2015 இல 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 131 (1) (இ) பிரிவின் கீழான கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்**

## இலங்கை பொது மக்களிடம் மன்னிப்புக்கு கோரல்

களுகப்புகே தரிந்து சந்தகெலும் பெரேரா ஆகிய நான், இல-08A, குலரத்ன வீதி, அம்பலங்கொட என்ற முகவரியில் அமைந்துள்ள நிவ் சம்பத் பார்மசி என்ற மருந்தகத்தின் ஊழியர் ஆவேன்.

ஔடததத்தின் விளைவுகள், நிலை, கலவை அல்லது பாதுகாப்பு பற்றி தவறான வழிகாட்டல்களால் மோசடியான அல்லது சரியான தெளிவை வழங்கும் விதமாக மருந்து சிட்டையில் குறிப்பிடப்படும் ஔடதம் சார்பாக வேறு ஔடதங்களை விற்பனை செய்த குற்றத்திற்கு வழக்கு இல - 53263 இன் கீழ் கொடுக்கப்பட்ட வழக்கில் நான் குற்றவாளியாக்கப்பட்டேன் எனவும், பலபிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ரூ.75,000 தண்டத்திற்கு ஆளானேன் எனவும் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

இக் குற்றம் என்னால் மீண்டும் இடம்பெறமாட்டாது என தெரிவிப்பதுடன் இடம்பெற்ற குற்றம் சம்பந்தமாக இலங்கை வாழ் பொதுமக்கள் சகலரிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

## வினாடி வினாப் போட்டியில் கல்முனை சாஹிரா முதலிடம்



கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் இரு மொழி மூலம் கல்வி கற்கும் இரு மாணவர்கள் மாகாண மட்டத்தில் அறிவியல் வினாடி வினாப் போட்டியில் சாதனை படைத்து பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

கல்லடி /கிரான் வித்தியாலயத்தில் ஆங்கில மொழியில் (30) இடம்பெற்ற மாகாண மட்ட இந்த வினாடி வினாப் போட்டியில் தரம் 11 இல் இருமொழி மூலம் கல்வி கற்கும் ஏ.எம்.நஸாத் அஸ்னி முதலாம் இடத்தையும், தரம் 10 இல் இருமொழி மூலம் கல்வி கற்கும் மாணவன் எஸ்.எம். ஷிபாப் அதி விசேட தேர்ச்சியும் பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்களுக்குப் பயிற்சியளித்த அறிவியல் ஆசிரியர்களுக்கும் இருமொழிக் கல்வி மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கான (இருமொழி) ஒருங்கிணைப்பாளருடன் சாஹிராவுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பாடுபட்டமைக்கு பாடசாலை சமூகம் நன்றி தெரிவிக்கிறது.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

நேகம பிரதேசத்திலிருந்து 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருட காலப்பகுதியில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 53 மாணவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த 17 மாணவர்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் இதுவரை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற மூன்று மாணவர்கள் உட்பட 73 மாணவர்கள் அன்றைய தினம் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் ஷாபி சிகாப்தீன் கலந்து சிறப்பித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மே 5 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# 04 ஆண்டுகளுக்குப் பின் ஜனாதிபதி நிதியத்தின் ஆளும் சபை கூடியது



## புதிய திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு

ஜனாதிபதி நிதியத்தினால் நிதியுதவி வழங்கும் நோய்களுக்கு மேலதிகமாக நோயாளர்களின் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் சிபாரிசுடன் புதிய நோய்கள் உள்வாங்கப்பட உள்ளதாக ஜனாதிபதி நிதியம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அறுவை சிகிச்சை, மருத்துவ செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும் உதவித்தொகையின் அளவை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நான்கு வருடங்களின் பின்னர் ஜனாதிபதி நிதியத்தின் சபை (03) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியபோதே இவ்விடயங்கள் ஆராயப்பட்டன.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியினால்

04

# புத்த பெருமானின் போதனைகளை பின்பற்றி நாட்டை முன்னேற்றுவோம்



இலங்கையருக்கும், உலகெங்கிலுமுள்ள பௌத்தர்களுக்கும், உலக மக்கள் அனைவருக்கும் வெசாக் தின வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் மற்றும் இறப்பு ஆகியவை பௌத்தத்தின் மிகப்பெரிய திருவிழாவாகும் , இது உலகின் பௌத்த மக்களால் மிகுந்த நம்பிக்கையுடன் கொண்டாடப்படுகிறது.

இவ்வுலகில், நிலைநாட்டப்பட்ட தோற்கடிக்க முடியாத தத்துவத்தை உலகுக்கு அருளியவர் அவர்.பிரபஞ்சத்தில் உள்ள பூரண உண்மையைக் கண்டு, புத்தபிரான் உபதேசித்த ஸ்ரீ சதர்மம் நிரந்தரமானது என்பது நாளுக்கு நாள் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

பௌத்த சகாப்தம் எப்பொழுதும்பௌதிகவாழ்க்கையை வளர்த்து, அதன் அடிப்படையில் ஆழ்நிலை வாழ்க்கையை வளர்க்க நடைமுறைச் செயல்களின் வரிசையைக் காட்டியுள்ளது. மேலும் அந்தக்

04

# இலங்கை விமானப்படைக்கு இந்தியா உபகரணங்கள் அன்பளிப்பு

## இரு தளபதிகளும் ஆவணங்களில் கைச்சாத்து

(ஸாதிக் ஷிஹான்)



இலங்கைக்கு உத்தியோபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய விமானப்படை தளபதி ஏயார் சீப் மார்ஷல் விவேக் ராம் சௌத்ரி, இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஏ என் 32 ரக விமானங்களுக்கு தேவையான உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இது தொடர்பான நிகழ்வு கட்டுநாயக்க விமானப்படை தளத்திலுள்ள இலக்கம் இரண்டு என்று அழைக்கப்படும் விமானப்படைக்கு சொந்தமான கனரக வாகன பிரிவில் இடம்பெற்றது.

இந்நிகழ்விலேயே,மேற்படி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இலங்கை, இந்தியாவுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற ஏழாவது வருடாந்த பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலில், இலங்கை விமானப்படையின் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தி, மேம்படுத்தும் விசேட வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருந்தது.இலங்கை விமானப்படை தளபதி இவ்வேண்டுகோளை விடுத்திருந்தார். இதற்கமையவே, இவ்வுபகரணங்களை இந்திய அரசாங்கம் வழங்கியது. இதற்கமைய மேற்படி உபகரணங்களை கையளிப்பதற்கு தேவையான உத்தியோகபூர்வ ஆவணங்களில் இலங்கை மற்றும் இந்தியா விமானப்படைத் தளபதிகள் கையொப்பமிட்டு ஆவணங்களை பரிமாறிக் கொண்டனர்.

இந்நிகழ்வில் இலங்கை விமானப்படையின் பிரதிப் பிரதம அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் பியன்வில, விமான பொறியியல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் எயார் வைஸ் மார்ஷல் ரஞ்சித் சேனாநாயக்க, கட்டுநாயக்க விமானப்படை தளத்தின் தளபதி எயார் வைஸ் மார்ஷல் லசித்த சுமனவீர உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

04

## சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா; ஜனாதிபதி பிரிட்டன் பயணமானார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை (04) அதிகாலை 3.15 மணியளவில் பிரிட்டன் பயணமானார்.

ஜனாதிபதியுடன் மேலும் 08 பேர் பிரிட்டன் புறப்பட்டுச் சென்றனர். நாளை (06) வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் நடைபெறும் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை பயணமானார்.

## ருவாண்டாவில் மண்சரிவு: சுமார் 120 பேர் உயிரிழப்பு

கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் கன மழையால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி, 120 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

“ருவாண்டாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் நாட்டின் வட மாகாணங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளன. குறிப்பாக மழை பிரதேசங்கள் கடும் மண்சரிவை சந்தித்துள்ளன. இந்த மண்சரிவில் சிக்கி இதுவரை 120க்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். பலர் மண்ணுக்குள்

04

National Lotteries Board — புதன்கிழமை 2023.05.03 — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5105 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,410,656.00 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 8 4 2 2 3 8

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1560 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,577,509.20 — வெற்றி இலக்கங்கள் 8 2 0 9 4 6

மெகா பவர — சீட்டிழுப்பு இலக்கம் 1453 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 318,962,950.00 — W 11 — வெற்றி இலக்கங்கள் 08 14 27 46 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1135 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,747,445.60 — ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 19 20 25 77

கோவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3347 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,040,980.64 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 02 23 37 75

ஹந்தஹன — சீட்டிழுப்பு இலக்கம் 414 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00 — வெற்றி இலக்கங்கள் 05 13 34 58

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### விலைக்கோரலுக்கான அழைப்பு

| | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 1. | பட்டிருப்பு வெள்ளாவெளி வீதியில் (0+000 - 0+340) கி.மீற்றரில் Wearing Course பயன்படுத்தி தற்போதுள்ள மேற்பரப்பை மேம்படுத்துதல் மற்றும் அகலமாக்குதல் |
| 2. | பட்டிருப்பு வெள்ளாவெளி வீதியில் (0+495 - 0+745) கி.மீற்றரில் Wearing Course பயன்படுத்தி தற்போதுள்ள மேற்பரப்பை மேம்படுத்துதல் மற்றும் அகலமாக்குதல் |
| 3. | பட்டிருப்பு வெள்ளாவெளி வீதியில் (0+745 - 0+930) கி.மீற்றரில் Wearing Course பயன்படுத்தி தற்போதுள்ள மேற்பரப்பை மேம்படுத்துதல் மற்றும் அகலமாக்குதல் |
| 4. | லொயிட்ஸ் அவன்யூ (0+000 - 0+210) கி.மீற்றரில் அஸ்பால்ட் மேற்பரப்பிட்டு மேம்படுத்துதல் மற்றும் அகலமாக்குதல் |
| 5 | லொயிட்ஸ் அவன்யூ (0+210 - 0+420) கி.மீற்றரில் அஸ்பால்ட் மேற்பரப்பிட்டு மேம்படுத்துதல் மற்றும் அகலமாக்குதல் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-05-08ஆம் திகதி முதல் 2023-05-15ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

### விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

1. அட்டவணையில் உள்ளவாறு கீழ்க்காணும் வேலைகளுக்கு தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவர் பொறியிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார் அத்துடன் அண்ணளவான மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 20 மில்லியன் (VAT இன்றி) ஆகும்.

| உருப்படி இல | ஒப்பந்த இல. | திட்டத்தின் பெயர் | நிர்மாண காலம் (நாட்கள்) | குறைந்தபட்ச ICTAD பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | DSD/DEV/ 03/12/ 2023 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் உள்ளடக்கப்பட்ட பிரதேசம் (ரீட் அவெனியூ விடுதி கட்டிடம், ஹொக்கி பெவிலியன், மைதான வளாகங்கள், அமைச்சு கட்டிட வளாகங்கள், டொரிங்டன் விடுதி, டொரிங்டன் பெவிலியன், cossfitgym, மற்றும் மைதான வளாகங்கள்) இன் கீழான வளாகங்களில் பராமரிப்பு வேலைகள் | 365 நட்கள் | C7 அல்லது அதற்கு மேல் | 3500.00 | வங்கிப் பிணை 100,000.00 அல்லது காசு வைப்பு 50,000.00 |

2. எல்லா வேலைகளினதும் நிறைவுக்கான காலம் ஆரம்பித்த தினத்தில் இருந்து 365 நாட்களாகும்.
3. கொழும்பு 07 இல் விளையாட்டு அமைச்சு கட்டிடம் மற்றும் ரீட் வெனியூ பிரதேசத்தில் இந்த தளம் அமைந்துள்ளது.
4. இந்த வேலைகள் பிரதானமாக நீர்க்குழாய் வேலைகள், மின்சாரம், தரை பராமரிப்பு வேலைகளுடனான சிவில் மற்றும் இயந்திரவியல் மற்றும் பொருட்கள் வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.
5. விலைமனுக்கள் தேசிய போட்டி கேள்வி முறைமையுடாக நடத்தப்படும்.
6. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் சம்பந்தப்பட்ட ICTAD பதிவு C7 அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும். கடந்த 2 ஆண்டுகளில் குறைந்தபட்சம் இரண்டு திட்டங்களில் சமமான தன்மையுடைய வேலைகளில் அனுபவம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

   அத்துடன் கீழேயுள்ள முகவரியில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களைப் பரீசீலிக்கலாம்.
8. விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் காசாளருக்கு செலுத்தப்படக்கூடிய ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா. 3500.00ஐ செலுத்துவதன் பேரில் 2023.05.05 முதல் 2023.05.25 வரை 9.00 மணி முதல் 15.00 மணிவரை மேற்படி முகவரியிலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் நாயகத்திற்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலை ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தல் முறை காசாக இருக்கும்.
9. கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்த, இல. 09, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் எமது திணைக்கள காசாளருக்கு காசு வைப்புச் செய்யலாம் அல்லது நிர்மாண உத்தரவாத நிதி, இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட நம்பகமான வங்கி செயற்பாட்டிலிருந்த அட்டவணையின் பிரகாரம் விலைமனுப் பிணையை செலுத்துதல் வேண்டும். விலைமனுப் பிணை விலைனு திறக்கப்படும் தினத்திலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
10. விலைமனு செல்லுபடியாதல் விலைமனு திறக்கப்படும் தினத்தில் இருந்து 91 நாட்களாகும்.
11. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் நகல்களுடன் மூலப் பிரதி மற்றும் பிரதி எனக் குறிப்பிடப்பட்டு 2023.05.25ம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கீழே தரப்படும் முகவரிக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். (விலைமனுக்கள் விளையாட்டு அபிவிருத்தி பெறுகைக் கிளை - இரண்டாம் மாடியில் உள்ள கேள்விப் பெட்டிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) தாமதமான விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது சமுகமளித்திருக்கும் பிரதி நிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்வுடன் உடனடியாகத்திறக்கப்படும்.

**மேலே சொல்லப்பட்ட முகவரியானது:-**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு-07.**
**தொலைபேசி: 0112694566, பெக்ஸ்: 0112694566**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### விலைக்கோரலுக்கான அழைப்பு

| | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 1. | மாவடி ஓடை தொடக்கம் இரைச்சல்குளம் வரையான (0+000 - 2+250 km) வீதியை மேம்படுத்துதல் - படிநிலை I |
| 2. | மாவடி ஓடை தொடக்கம் இரைச்சல்குளம் வரையான (2+250 - 4+000 km) வீதியை மேம்படுத்துதல் - படிநிலை II |
| 3. | மாவடி ஓடை தொடக்கம் இரைச்சல்குளம் வரையான (4+000 - 6+500 km) வீதியை மேம்படுத்துதல் - படிநிலை III |
| 4. | மாவடி ஓடை தொடக்கம் இரைச்சல்குளம் வரையான (பிரிவு I: 6+500 - 7+700 km மற்றும் பிரிவு II: 0+000 - 2+000 km ) வீதியை மேம்படுத்துதல் - படிநிலை IV |
| 5 | ஆரையம்பதி களுவாஞ்சிக்குடி கண்ணகி அம்மன் கோயில் வீதி மற்றும் ஆரையம்பதி RKM/மகா வித்தியாலய உள்ளக வீதியை நிர்மாணித்தல் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-05-08ஆம் திகதி முதல் 2023-05-12ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

# லேக்ஹவுஸ் நிறுவனத்தில் வெசாக் தின நிகழ்வு





வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் காலம் சென்ற டி.ஆர் விஜேவர்த்தன, மற்றும் நிறுவனத்தில் பணியாற்றி காலஞ்சென்ற அனைவரினதும் ஆத்ம சாந்திக்காகவும் தற்போது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளவும் லேக் ஹவுஸ் பௌத்த சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தர்மோபதேச நிகழ்வு நேற்று (04) லேக் ஹவுஸ் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது. ராஜகீய பண்டித கொடனெழுவே புங்ஞங்நந்த அனுநாயக்க தேரர் தர்மோபதேசம் நிகழ்த்தினார். லேக் ஹவுஸ் நிறுவன தலைவர் அனுஷ பெல்பிட்ட உட்பட நிறுவனத்தின் பணிப்பாளர் குழு உள்ளிட்ட ஊழியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பதில் நிதியமைச்சராக செஹான் சேமசிங்க

*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளதால், பதில் நிதியமைச்சராக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கையளித்தார்.

அரசியலமைப்பின் 50ஆவது சரத்துக்கு இணங்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி நாடு திரும்பும்வரை நிதி, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் தேசிய கொள்கைகள் பதிலமைச்சராக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கடமையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நலன்புரி செயற்பாடுகளுக்கு...

இதற்கமைய கடந்த வருடத்தை விட அதிக நிதியை

இவ்வருடம் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம், எந்த சந்தர்ப்பத்திலும் சமூக நலன்புரிக்கான செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கையெடுக்காது என்பதை உறுதிப்படுத்திய இராஜாங்க அமைச்சர், நலன்புரி பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதற்காக தெரிவு செய்யப்படுவோர் பாரபட்சமற்ற முறையின் கீழ்

தெரிவாகின்றனர்.

இது தொடர்பில் கடந்த சில தினங்களாக மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு அடுத்த மாதம் முதல், பிரதிபலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை யெடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டில் நாட்டின் தேசிய உற்பத்தி வீதத்தில் 02% நலன்புரி விடயங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. இந்தவகையில், இந்த வருடத்தில் தேசிய உற்பத்தி வீதத்தில் 18% வரை அதை அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### யாழ். நகரிலிருந்து...

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளி டமிருந்து, கொள்முதல் செய்யப்படும் கதலி வாழைப்பழங்கள் நிலாவரையிலுள்ள வாழைப்பழம் சுத்திகரிப்பு நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு அங்கிருந்து நேரடியாக துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு துபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இதன் மூலம் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைப்பதுடன், உள்ளூர் விவசாயிகளுக்குப் பெரிதும் நன்மை கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 10,000 கிலோ வாழைக் குலைகள் வாரந்தோறும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம், அனுராதபுரம் இராஜாங்கனை வாழைப்பழ ஏற்றுமதி திட்டத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

### செயற்கை விபத்தில் மனைவியை...

இதில் 40 வயது பெண் (மனைவி) ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன்

பெண்ணை விபத்துக்குள்ளாக்கிய ஜீப் வண்டி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

எல்பிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.இதையடுத்தே, சந்தேக நபர் கைதானார்.

விபத்தில் உயிரிழந்துள்ள பெண் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிவதாகவும் அவர், நான்கு நிறுவனங்களிடம் 50 இலட்சம் ரூபாவுக்கான ஆயுள் காப்பீட்டை செய்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மனைவியைக் கொலை செய்து அதனை விபத்தாகக் காண்பித்து, காப்புறுதி நிறுவனங்களிலிருந்து ஆயுள் காப்பீடுகளை பெற்றுக் கொள்ள பெண்ணின் கணவர், திட்டமிட்டருந்தது விசாரணைகளில் தெரிய வருந்துள்ளது.

### இலங்கையை மீண்டும்...

நுண்பொருளாதார ஸ்திரப்படுத்தல், பணவீக்கத்தை குறைத்தல் போன்றவற்றை வலியுறுத்து வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வருவாய் திரட்டல் வரிவசூலிப்பு போன்றவற்றில் இலங்கை மிகவும் பின்னிலையில் உள்ளமைக்கும் இது ஒரு காரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 க்கு முன்னர்அவர்கள் முன்னெடுத்த கொள்கைளிலுள்ள தவறுகளே இதற்கு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆதரவு திட்டம் என்பது வருவாய் அடிப்படையிலான ஒருங்கிணைப்பாகும். இது பொருளாதாரத்துக்கு ஸ்திரதன்மையை வழங்குகின்றதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மிகவும் உயர்நிலைக்கு சென்ற இலங்கையின் பணவீக்கத்தை கட்டுப்படுத்த சர்வதேச நாணய நிதியம் விரும்புகின்றதென தெரிவித்துள்ள அவர், ஆட்சி மற்றும் ஊழல் விவகாரங்களுக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் முயல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார வளர்ச்சியை பொறுத்தவரை 2022 இல் 8.7 வீத வீழ்ச்சி காணப்பட்டது. 2023 இல், இது 03 வீதமாக காணப்பட்டு, சிறிய மீட்சி காணப்படும் எனவும் கிருஸ்ணா ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

### 04 ஆண்டுகளுக்குப் பின்... 03ஆம் பக்கத் தொடர்

நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் உட்பட 07 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது இச்சபை. இதில் வண, கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ நாயக்க தேரரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நான்கு வருடங்களின் பின்னர் நடைபெற்ற இந்த ஆளும் சபை கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தவிர ஏனைய உறுப்பினர்கள் சகலரும் கலந்துகொண்டனர்.பல்வேறு விசேட வேலைத் திட்டங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன.

அபிவிருத்தி லொத்தர் சபையினால் பெறப்படும் வருமானம் மற்றும் பல்வேறு நன்கொடையாளர்களால் வழங்கப்படும் நிதி என்பனவே, ஜனாதிபதி நிதியத்துக்காக பயன்படுத்தப்படுகின்றன. இந்நிதியத்துக்கும் கிடைக்கும் நிதியின் ஒரு பகுதி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதிக்கும் வழங்கப்படவுள்ளது.

வறுமை ஒழிப்பை முதன்மையாகக் கொண்ட ஜனாதிபதி நிதியம், மருத்துவ உதவிகளுக்காக அதிக பங்களிப்பை வழங்கி வருகிறது. இது தொடர்பில்,

ஜனாதிபதி நிதியத்துக்கு 1,20,000 கோரிக்கைகள் கிடைத்துள்ளன. இவற்றை 31122022 க்குள் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.இதற்காக 1,717 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி செலவிடப்பட்டது. தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அறுவை சிகிச்சை, மருத்துவ செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவ உதவித்தொகையை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### புத்த பெருமானின்... 03ஆம் பக்கத் தொடர்

கண்ணோட்டத்தில், பௌத்தம் மிகவும் அடிப்படை மற்றும் மேம்பட்ட வாழ்க்கை முறையாகும்.

தர்மம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு பதிலளித்த புத்தர்,

“யோ தம்மன் பஸ்ஸதி, ஸோ மன் பஸ்ஸதி

யோ மன் பஸ்ஸதி ஸோ தம்மன் பஸ்ஸதி ”.

எவன் தர்மத்தைப் பார்க்கிறானோ அவன் என்னைப் பார்க்கிறான்.எவன் என்னைப் பார்க்கிறானோ அவன் தர்மத்தை பார்க்கிறான். அதாவது.

புத்தபெருமானின் தர்மம் உலக உயிரினங்கள் அனைத்திற்கும் தனித்துவம் மிக்க கருணை நிரம்பிய தர்மம். மனித இனம் முழுவதற்கும் இணக்கமான நடைமுறையை வழிநடத்தும் தூய தர்மத்தால் ஈர்க்கப்பட்டு, மனித நேயத்துடன் மத நல்லிணக்கத்தைப் போற்றும் ஒவ்வொருவரும் இருந்தால், அவர்கள் பௌத்தத்தை உண்மையாக பின்பற்றுபவர்கள். எனவே, உலகின் மிகப் பெரிய தர்மத்தில் தஞ்சம் புகுந்த உன்னத குடிமக்களாக, உலக உயிரினங்கள் மீது கருணை, பாசம் மற்றும் அன்புடன் மகத்தான வெசாக் நாட்களைக் கொண்டாடுவோம்.

### புதிய திரிபுடனான டெங்கு...

உற்பத்தியாகும் பகுதிகளை இனங்கண்டு அவற்றை ஒழிப்பதில், மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக அறிவுறுத்தியுள்ள அவர், ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் டெங்கு புதிய திரிபு தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோய் தொடர்பில் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுப்பது முக்கியமாகுமென்றும் அவர் பரிந்துரை செய்துள்ளார்.

### கௌதம புத்தரின்...

வழியாக அமைந்துள்ளது. எனவே, இக்கட்டான காலகட்டத்தைக் கடந்து இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதற்கான சவாலை முறியடிக்க, புத்தர் கூறியது போல் ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் ஒன்றிணைவது அவசியம். பௌத்த தத்துவத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கருணை (மெட்டா), இரக்கம் (கருணா), சாந்தம் (முதிதா) மற்றும் சகிப்புத்தன்மை (உபேக்ஷா) ஆகிய நான்கு நற்பண்புகளைப் பின்பற்றி நாம் அந்தப் பாதையில் பயணிக்க வேண்டும்.

வளமான இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப புத்தரின் போதனைகளின்படி அனைவரும் ஒத்துழைப்புடனும் ஒற்றுமையுடனும் அணிதிரளுமாறு இந்த புனித நாளில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வெசாக் அனுட்டானங்கள், அறியாமை இருளை அகற்றி இலங்கையை மறுமலர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் வரமாக அமையட்டும்! அனைத்து உயிர்களுக்கும் இன்பமான வெசாக் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### நவீன உலகத்துக்கு...

எட்டப்படவுள்ளன.இதற்கேற்ப

இந்தச் சட்ட கட்டமைப்புக்கு தொழில் சங்கங்கள், புத்திஜீவிகள் சமூக அமைப்புக்கள், தொழில் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்காதவர்கள் உள்ளிட்டோரின் கருத்துக்கள், ஆலோசனைப் பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தச் சட்டம் குறித்து நாம் குறிப்பிட்ட போது, வழமை போன்றே எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் குறை கூறினர். இவர்கள், எப்பொழுதும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுவதாகவும் அமைச்சர் கூறினார்.

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதுடன் அவர்களின் கௌரவத்தையும் பாதுகாத்து, சர்வதேச தொழில் அமைப்பு ஏற்றுக்கொள்ளக்கொள்ளக்கூடிய புதிய தொழில் சட்டத்தை உருவாக்குவதுடன் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் பாதுகாப்பு அவர்களின் உரிமை, விசேட தேவைகளை கொண்டுள்ளவர்களின் உரிமையை உறுதி செய்வதும் எமது நோக்கமாகும்.

மே தினத்தில் மாத்திரம் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் எழுப்பாது, அவர்களின் நீடித்த நலனை இலக்காகக் கொண்டு, செயல்படுவதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

### அத்துமீறல்கள் இடம்பெற்றிருப்பின்....

அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் அந்தப் பகுதிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டபோது அவை அகற்றப்பட்டிருந்ததையும் சில இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையிலேயே, தையிட்டி விஹாரை தொடர்பாக சில தரப்புக்களினால் தற்போது பேசப்படுகிறது.

இதற்கான அடிக்கல் 2018 ஆம் ஆண்டு அப்போதைய வடக்கு மாகாண ஆளுநரினால் நாட்டப்பட்டிருக்கிறது.

விஹாரை அமைக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்களை சம்மந்தப்பட்ட பிரதேச செயலாளரிடம் கோரியிருக்கின்றேன். அவற்றை ஆராய்வதுடன், விரைவில் ஜனாதிபதிக்கு வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பிலும் பிரஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றேன்.

வெடுக்குநாறி விவகாரத்தை சுமுகமான முறையில் தீர்த்து வைத்தது போன்று, இந்த விடயங்களையும் ஜனாதிபதி சரியான முறையில் தீர்த்து வைப்பார்." என்று தெரிவித்தார்.

அதேவேளை, மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்க திட்டங்களை வினைத் திறனாக யாழ் மாவட்டத்தில் முன்னெடுக்கும் வகையிலும் பல்வேறு விடயங்கள் இந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டன.

இதன்போது, நாட்டை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் வெற்றியடைந்து வருவதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூர் உற்பத்திகள் தொடர்பில் மக்களுக்கு ஆர்வத்தினை ஏற்படுத்தும் வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

உள்ளூர் உற்பத்திகளில் மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், உள்ளூர் உற்பத்திகள் அறுவடை செய்யப்படுகின்ற காலப் பகுதிகளில், குறித்த பொருட்களுக்கான இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டு, தாராளமான சந்தை வாய்ப்பையும் சிறந்த விலையையும் பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கை அமைச்சரவை ஊடாக மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### இலங்கைக்கு விமான... 03ஆம் பக்கத் தொடர்

இந்திய விமானப்படை தளபதிக்கு இலங்கை விமானப்படையின் இரண்டாம் இலக்க ஸ்கோர்ட்டனின் கட்டளை தளபதி குரூப் கெப்டன் நுவன் வெலகெதர நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

ஏ, என், 32 ரக விமானம், பயணிகள் போக்குவரத்து, சரக்குகள் சேவை மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ருவாண்டாவில் மண்சரிவு:... 03ஆம் பக்கத் தொடர்

புதையுண்டு காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

மண்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி விரைவாக நடந்து வருவதாக, ருவாண்டா அரசு தெரிவித்துள்ளது. ருவாண்டாவில் மழையினால் விவசாய நிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் ருவாண்டாவில் மேலும் கடும்மழை பெய்ய இருப்பதாக அந்நாட்டு வானிலை மையயம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

### A/L விடைத்தாள் மதிப்பீட்டுக்கு...

கலந்துரையாடலை அடுத்த வாரம் ஒழுங்கு செய்யவுள்ளதாக ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்ரிய அண்மையில் தெரிவித்தார். இந்தநிலையில், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

### ரூ.50,000 இலஞ்சம்....

தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை, கைதான பொலிஸ் சார்ஜன்ட் அம்பாறை மாவட்டத்தின் தமன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### வெசாக் தினத்தையிட்டு...

சிறைச்சாலை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி முறையான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளின்கீழ், பார்வையாளர்கள் கைதிகளை சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளிலும் இந்த விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### தேசிய மத நல்லிணக்கத்துக்கு...

நிலையைத் தணிப்பதற்கு பெரிதும் உதவும்.

"ஏகேன போகே புஞ்ஜ்யேய

த்விஹி கம்மன் பயோஜயே

சதுத்தங்ஞ்ச நிதாபெய்ய –

ஆபதாசு பவிஸ்ஸதி”

தான், நேர்மையாகச் சம்பாதித்த செல்வத்தில் காற் பகுதியைத் தினசரிச் செலவுக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், அரைவாசியைத் தொழிலில் முதலீடு செய்ய வேண்டுமென்றும், அவசர காலச் செலவுக்காகக் காற்பங்கைச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் புத்த பெருமான் கூறுகிறார்.

சமூக நன்நெறிகளைக் கருத்திற் கொள்ளாது மனிதாபிமானமற்ற சில சம்பவங்கள் பதிவாகும் இன்றைய சூழலில், உன்னதமான பௌத்த தத்துவத்தின் வழியே உண்மையான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். அன்பு (மெத்தா), காருண்யம் (கருணா), மகிழ்ச்சி (முதிதா), பற்றின்மை (உபேக்ஷா) என்ற நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தில் நாம் செயற்படுகிறோம்.

அனைத்து உயிரினங்களும் துன்பங்கள் நீங்கி, ஆரோக்கியமும், அமைதியும் பெற்றிட எனது பிரார்த்தனைகள். இவ்வாறு, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

### சுமந்திரன், மாவை...

உள்ளிட்டவர்கள் நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

விஹாரையை அகற்றக்கோரி நேற்று முன்தினம்(03) முதல் இன்று (05) வரையில் தொடர் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செ கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்ட இடத்துக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற பொலிஸார், போராட்டக்காரர்களின் கொட்டகையை அங்கிருந்து பிடுங்கியதுடன், போராட்டகாரர்களை அங்கிருந்து வெளியேறுமாறும் இல்லையெனில் அனைவரையும் கைது செய்வோமெனவும் அச்சுறுத்தியதாக கூறப்படுகிறது.

போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வேறு எவரும் செல்ல முடியாதவாறு வீதிகளில் தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன . இவற்றை மீறி பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்ட சிலர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கான உணவு , நீர் மற்றும் மருந்து ஆகியவற்றை வழங்கவும் பொலிஸார் அனுமதிக்கவில்லை.இதனால் சுமார் 07 மணி நேரத்தின் பின்னர் மனிதவுரிமை ஆணைக்குழு உள்ளிட்டவர்களின் அழுத்தங்கள் காரணமாக நேற்று வியாழக்கிழமை அதிகாலை 1.30 மணியளவிலையே உணவு வழங்க அனுமதிக்கப்பட்டது.

நேற்றுக் காலை பாராடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன் , பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்கள் தடைகளை மீறி உள்ளே சென்று, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை சந்தித்து தமது ஆதரவை தெரிவித்தனர்.

### தேசிய கொள்கை...

தேசிய கொள்கை ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு, அதன் தலைவர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்களின் கொள்வனவுச் செயற்பாடுகளிலும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக, முன்னைய கூட்டத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டது.

இந்த முறையை, விரைவாக நடைமுறைப்படுத்தும் திட்டங்களை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை உபகுழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். இதற்கமைய இவ்வருடத்தின் ஜூன் மாதத்துக்குள், பல அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களில் இதனை பரீட்சிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் வருகை தந்திருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரசாங்க நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்குவதால், எளிதான மற்றும் விரைவான சேவையை வழங்க முடியும். இது பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் அதிகாரிகள் இதற்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் மற்றும் அதன் தற்போதைய நிலை குறித்து விளக்கமளித்தனர்.

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

## அல்குர்ஆனை விளங்கிக்கொள்வதற்கான தேவை

அருள்மறையாம் அல் குர்ஆன் மனிதனின் இம்மை, மறுமை வாழ்வின் விமோசனத்தையும் சுபீட்சத்தையும் இலக்காகக் கொண்டுள்ளது. அதனால் அதனை விளங்கிக்கொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும். அது அல்குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கமாகவும் காணப்படுகிறது. இதனை அல் குர்ஆன், 'வசனங்களை கவனித்து ஆராய்வதற்காகவும், அறிவுடையோர் நல்லுணர்வு பெறுவதற்காகவும் அருள் நிறைந்த இவ்வேதத்தை உங்கள்மீது இறக்கியருளினோம்' என்று குறிப்பிட்டுள்ளது. (ஸாத் 29)

இப்புனித அருள்மறையை விளங்க முனைவதற்கு முன்னர் என்ன செய்ய வேண்டும், அதனை விளங்குவதற்கு முடியாத பிரகாரம் காணப்படுகின்ற தடைக்கற்கள் எவை? போன்ற சில விடயங்களை அறிந்துகொள்வது மிகவும் அவசியமானது. இதுபற்றி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தனது இஹ்யாவில் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்.

அல்குர்ஆனை விளங்குவதற்கு முன்னர் நாம் எம்மை உள ரீதியாகத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அவற்றை நாம் கீழ்வருமாறு நோக்கலாம்.

முதலாவது: அல்குர்ஆன் மூலம் அல்லாஹ் பேசுகிறான் என்ற இறை பேச்சின் மகத்துவத்தை புரிந்துகொள்ள வேண்டும், அவனது உயர்ந்த அந்தஸ்திலிருந்து படைப்புகள் விளங்கிக்கொள்ளும் தரத்திற்கு அவனது வசனங்களை அவன் அருளியுள்ளான். இது மிக நீண்ட காலமாக நிகழும் நிகழ்வாகும். மூஸா (அலை) அவர்களை அல்லாஹ் பலப்படுத்தி இருக்காவிட்டால் அவரால் அல்லாஹ்வுடைய பேச்சை செவிமடுக்க முடியாது போயிருக்கும். மலைகள் துகள்களாக மாறியது போன்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

இரண்டாவதாக: எம்மோடு கதைக்கின்றவனின் மகத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். அல்குர்ஆனை ஓதுவதற்கும் வாசிப்பதற்கும் முன்னர் இது ஒரு மனிதனுடைய பேச்சல்ல, இது அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பதனை உணர வேண்டும்.

இக்ரிமா இப்னு அபீ ஸுப்யான் (ரழி) அவர்கள் அல்குர்ஆனைத் திறந்தால் 'இது எனது ரப்பின் பேச்சு, இது எனது ரப்பின் பேச்சு...' என்று கூறி மயங்கி விடுவார்கள். பேச்சை மகத்துவமாக கருதுவது பேசியவனை மதித்ததற்கு சமனானதாகும்.

மூன்றாவது: அல்குர்ஆன் சொல்லவரும் கருத்துக்களை உள்வாங்கிக்கொள்ளும் பிரகாரம் எமது உள்ளம் அதன்பால் ஈர்க்கப்பட வேண்டும். எமது மூதாதையர்களான ஸலபுஸ் ஸாலிஹீன்கள் அல்குர்ஆனை ஓதும்போது ஈர்க்கப்படாவிட்டால் அதனை மீண்டும் ஓதுகின்றவர்களாக இருந்துள்ளார்கள். (இஹ்யா உலூமித்தீன்)

அல்குர்ஆனை விளங்க முனையும் ஒருவர் இன்னொரு விடயத்தின்பாலும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது அல்குர்ஆனை விளங்குவதற்கு தடையாக அமையும் விடயங்களை இனங்கண்டு அவற்றை தவிர்ந்துகொள்ள வேண்டும். இதுபற்றியும் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

அதிகமான மனிதர்கள் அல்குர்ஆனின் கருத்துக்களை புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கு ஷைத்தான் மனித உள்ளத்தில் ஏற்படுத்தியுள்ள திரைதான் காரணமாக அமைந்துள்ளது. அதன் காரணமாக அல்குர்ஆனின் அற்புதங்களையும் இரகசியங்களையும் புரிந்துகொள்ள முடியாதவாறு அவர்கள் குருடாகி விட்டார்கள்.

அல்குர்ஆனை விளங்குவதற்கான தடைகள் நான்காகும்.

முதலாவது: எழுத்துக்களை உச்சரிப்பதோடு மாத்திரம் முழு கவனத்தையும் சுருக்கிக்கொள்வதாகும். அல்லாஹ்வுடைய பேச்சின் கருத்துக்களை விளங்குவதை விட்டும் ஷைத்தான் அவர்களை திருப்பி உச்சரிப்புகளோடு சுருக்கிவிட்டான். சரியாக உச்சரிக்கவில்லை என்று நினைத்து அதனை பூரணப்படுத்துவதற்காக அவர்கள் தொடர்ந்தும் வசனங்களை மீட்டிக் கொண்டு இருக்கிறார்கள். உச்சரிப்போடு மாத்திரம் சுருங்கிவிட்ட அவர்கள் கருத்துக்களை உணர்ந்து கொள்வதன்பால் கவனம் செலுத்துவது அவசியம். இக்குழப்பநிலையைப் பார்த்து ஷைத்தான் சிரித்துக் கொண்டிருப்பான்.

இரண்டாவது: ஒரு போக்கைப் பற்றி கேள்விப்பட்டவுடன் கண்மூடித்தனமாக அதனை பின்பற்றுவதாகும், அதற்காக வெறிகொண்டு எழுவது, அதனை நுணுக்கமாக நோக்காது அதிலே தேங்கிவிடுவது. இதுவும் அல்குர்ஆனை விளங்குவதற்கான ஒரு தடைக்கல்லாகும். நம்பிக்கைகளால் விலங்கிடப்பட்டு அதனை அறுக்க முடியாத நிலையிலுள்ள மனிதனாக அவன் இருக்கிறான். அவனது பிழையான நம்பிக்கைகளை தவிர வேறு எதுவும் அவனது உள்ளத்தில் காணப்பட மாட்டாது. அவனது கண்ணோட்டங்கள் அவன் செவிமடுத்தவற்றோடு சுருங்கி விடுகின்றது. அவனுக்கு ஒரு சிறிய சிந்தனையொன்று ஏற்பட்டு விட்டாலும் அவனது ஷைத்தான் அவனை விட்டுவிட மாட்டான்.

'உனது மூதாதையர்களின் நம்பிக்கைக்கு புறம்பான இந்த விடயம் உனது உள்ளத்தில் எவ்வாறு தோன்ற முடியும்' என்று அவனது சிந்தனைக்கு எதிராக யுத்தம் செய்யும். அப்போது அவன் அக்கருத்தை ஷைத்தானின் தூண்டலாகக் கருதுவான். அல்லாஹ்வின் பேச்சை விளங்குவதற்கான முயற்சியிலிருந்து விலகிவிடுவான்.

இது ஒரு பிழையான பின்பற்றலும் அல்குர்ஆனின் கருத்துகளைப் புரிந்து கொள்வதற்கான தடையுமாகும்.

மூன்றாவது: பாவச்செயலில் பிடிவாதமாக இருப்பது பெருமையடிப்பது, மனோ இச்சைக்கு கட்டுப்படுவது போன்றன பாவச்செயல்களாகும். இவை மனித உள்ளங்கள் கறைபடியவும் இருளடையவும் காரணமாய் அமைகின்றன. கண்ணாடியில் அழுக்குகள் படிந்தால் எவ்வாறு தெளிவாகப் பிரதிபலிக்காதோ அதேபோன்ற நிலைதான் இதுவும். இதுதான் உள்ளத்துக்கான மிகப்பெரிய தடைக்கல். இத்தகைய செயற்பாடுகள் காரணமாகவே அதிகமானவர்கள் தடையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

மனோ இச்சையின் திரட்சி அதிகமாக இருக்குமளவுக்கு அல்லாஹ்வின் பேச்சை விளங்குவதற்கான தடையும் பாரியதாக காணப்படும். உலகப்பற்று உள்ளத்தில் குறைவாக இருக்கும்போது இறை பேச்சை உணர்ந்துகொள்ள முடியும்.

உள்ளம் என்பது கண்ணாடியைப் போன்றது. மனோ இச்சைகள் கறைகளைப் போன்றது. அல்குர்ஆன் சொல்லவரும் கருத்துக்கள் கண்ணாடியில் தோன்றும் பிம்பம் போன்றது. கண்ணாடியைக் கழுவிவிட்டால் அங்கு பிம்பம் தெளிவாக தோன்றுவது போன்று உள்ளத்தை தூய்மைப்படுத்தும் போது மனோ இச்சை நீங்கி விடுகின்றது. அல்குர்ஆனின் கருத்துக்கள் தெளிவாக விளங்கி விடுகின்றன.

அல்குர்ஆனை விளங்கவும் அதன் கருத்துக்களை உணர்ந்து கொள்ளவும் வேண்டுமானால் அல்லாஹ்வை நோக்கி செல்கின்றவர்களாக இருக்க வேண்டும். இது அல்லாஹ்வின் நிபந்தனையாகும். 'இது அல்லாஹ்வின் பக்கம் திரும்பி வரும் அனைவருக்கும் அகப்பார்வை அளிப்பதாகவும், நினைவூட்டும் நல்லுபதேசமாகவும் உள்ளது. (காப் 08),

'அல்லாஹ்வை நோக்கி செல்கின்றவர்கள் மாத்திரமே இதனைக்கொண்டு நல்லுணர்வு பெறுவார்கள். (முஃமின 13), 'அறிவுடையோர்கள்தான் இவ்வேதத்தின் மூலம் நல்லுணர்வு பெறுவார்கள். (ரஃத் 19) மறுமையின் அருள்களைவிட உலகின் மதிமயக்கத்தில் திளைத்திருப்பவன் அறிவுடையவனாக மாற முடியாது. அவனுக்கு இவ்வாக்குகளின் இரகசியங்கள் புலப்பட்டுவிடும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை.

நான்காவது: இப்னு அப்பாஸ் (ரழி), முஜாஹித் (ரஹ்) போன்றவர்கள் அல்குர்ஆனுக்கு கூறிய விளக்கங்களுக்கு அப்பால் அல்குர்ஆனுக்கு வேறு விளக்கங்கள் இல்லை, அறிவு சார்ந்து அல்குர்ஆனுக்கு விளக்கம் கூறுபவர்கள் நரகம் நுழைவார்கள் என்று கருதுவதும் அல்லாஹ்வின் பேச்சை விளங்கிக் கொள்வதற்கான பெரிய தடையாகும். (இஹ்யா உலூமித்தீன்)

ஆகவே அல் குர்ஆனை விளங்கிடுவதில் இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்களின் வழிகாட்டல்களை உணர்ந்து எம்மை மாற்றியமைத்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

## இஸ்லாத்தில் சகோதரத்துவம்

அனைத்து மனிதர்களுக்கும் அவரவர் உரிமைகளை நியாயமாகப் பங்கிட்டு வழங்கக்கூடிய ஒரு அமைப்பு இருக்குமானால் அங்கு தொழிலாளர் உரிமை, பெண் உரிமை, குழந்தைகள் உரிமை என்று தனித்தனியாகப் போராட வேண்டிய அவசியம் எழுவதில்லை.

ஒரு சமூகம் என்றால் அங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் இளைஞர் எனவும் தொழிலாளிகள், விவசாயிகள், வணிகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழில் முனைவோர் இன்னும் இதுபோன்ற பலரும் இருப்பார்கள். அங்கு பற்பல மொழிகள், நிறங்கள், இனங்கள், மதங்கள் மற்றும் கொள்கைகளைக் கொண்டவர்களும் இருப்பார்கள்.

அப்படிப்பட்ட பலர் கலந்து வாழும் சமூகத்தில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமானால் மனித உறவுகள் வலுப்பட வேண்டும். அத்துடன் சக மனிதர்களின் உரிமைகள் மதிக்கப்படவும், மீட்கப்படவும், வழங்கப்படவும் வேண்டும். மனித உரிமை மீறல்கள் கட்டுப்படுத்தப்படவும் வேண்டும்.

மனித உரிமைகள் நியாயமான முறையில் பங்கீடு செய்யப்பட வேண்டுமானால் அதற்குரிய நுண்ணறிவும் அதிகாரமும் தகுதியும் இவ்வுலகைப் படைத்தவனும் அதன் சொந்தக்காரனுமான இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு என்பதை பகுத்தறிவு கொண்டு ஆராயும் எவராலும் நிச்சயமாகக் கண்டுகொள்ள இயலும்.

அந்த இறைவன் தொகுத்து வழங்கும் வாழ்வியல் திட்டமே இஸ்லாம். இவை ஏட்டளவில் இல்லாமல் பேச்சளவில் நில்லாமல் இந்த வாழ்வியலை வாழ்க்கை நெறியாக ஏற்ற அனைவரிடமும் நடைமுறைக்குக் கொண்டு வருகிறது இஸ்லாம்.

அல்லாஹ்தஆலா அல் குர்ஆனில் இதற்கான அடிப்படையை பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறான்.

'மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள். அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள். உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (அல் குர்ஆன் 4:1)

அதாவது அனைத்து மனிதகுலமும் ஆதித் தந்தை மற்றும் ஆதித் தாயின் சந்ததிகளே. நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்பதையும் நம் அனைவருக்கும் இறைவன் ஒருவனே என்பதையும் அடிப்படையாக வலியுறுத்தியே உலகளாவிய சகோதரத்தையும் சமத்துவத்தையும் அல் குர்ஆன் நிறுவியுள்ளது.

அதேநேரம் நாம் அனைவரும் அந்த இறைவனின் பரிபாலனத்திலும் கண்காணிப்பிலும் உள்ளோம் என்பதை உணர்த்தியுள்ள அல் குர்ஆன், நம் செயல்களுக்காக நா ம் இறைவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வையும் உண்டாக்குகிறது இந்த இறை வசனம்.

நாம் அனைவரும் ஒரே குடும்பத்தினரே என்ற உணர்வு மேலோங்கும்போது சக மனிதனை தனது சகோதரனாக அல்லது சகோதரியாகப் பார்க்கும் பண்பு மனிதனுக்கு வந்துவிடும். அதனால் தொழிலாளி என்பவன் முதலாளியின் சகோதரனே. விற்பவன் வாங்குபவனின் சகோதரனே என்ற உணர்வுடன் உரிமை மீறல்கள் விசாரிக்கப்பட உள்ளன என்ற உணர்வும் மேலோங்கினால் அங்கு மனித உரிமை மீறல்களும் மோசடிகளும் ஒழிந்து ஒரு தூய்மையான சமூகம் அமைகிறது. அங்கு நிறத்தினதும், இனத்தினதும், மொழியினதும், நாட்டினதும் பெயரால் உருவாகும் பிரிவினை வாதங்களும் ஏற்ற தாழ்வுகளும் கிள்ளி எறியப்படுகின்றன. மாற்று மொழியினரும் நிறத்தவரும் அண்டை மாநிலத்தவரும் நம் சகோதரர்களே என்ற உணர்வு மக்களை ஆட்கொண்டால் இன்று நடக்கும் பெரும்பாலான முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

இறைவனுக்கு கட்டுப்பட்டு வாழுதல் என்ற கொள்கைக்குப் பெயரே இஸ்லாம் என்று அரபு மொழியில் அறியப்படுகிறது. இதை ஏற்றுக்கொள்ளும் போது மனிதன் தன்னைப் படைத்தவனை வணங்குவதோடு சகமனிதர்களின் உரிமையைப் பேண வேண்டிய கட்டாயத்திற்கும் உட்படுத்தப்படுகிறான்.

இஸ்லாத்தின் கட்டாயக் கடமைகளில் ஒன்று ஐவேளைத் தொழுகையாகும். இதன் மூலம் மேற்படி அடிப்படைகள் மனிதனுக்கு அடிக்கடி நினைவூட்டபடுகிறது. அத்துடன் இத்தொழுகைகளைக் கூட்டாக தோளோடு தோள் சேர்ந்து வரிசைகளில் நின்று நிறைவேற்றுவதன் மூலம் மனித சமத்துவமும் சகோதரத்துவமும் உறுதிப்படுத்தப்படுகிறது.

நபி(ஸல்) அவர்கள் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்திய இஸ்லாம் என்ற சுயசீர்திருத்த வாழ்வியல் திட்டத்தைஏற்று பின்பற்றுவோரிடம் எவ்விதமான மாற்றங்களை அது ஏற்படுத்தியது, தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக கீழ்கண்ட சம்பவம் நல்ல எடுத்துக்காட்டாகும்.

'நான் நபித்தோழர் அபூதர் (ரழி) அவர்களை (மதீனாவிற்கு அருகிலுள்ள) 'ரபதா' என்ற இடத்தில் சந்தித்தேன். அப்போது அவரின் மீது ஒரு ஜோடி ஆடையும் (அவ்வாறே) அவரின் அடிமை மீது ஒரு ஜோடி ஆடையும் கிடப்பதைப் பார்த்தேன். நான் (ஆச்சரியமுற்றவனாக) அதைப் பற்றி அவரிடம் கேட்டதற்கு, 'நான் (ஒரு முறை) ஒரு மனிதரை ஏசிவிட்டு அவரின் தாயையும் குறை கூறி விட்டேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'அபூதர், அவரையும் தாயையும் சேர்த்துக் குறை கூறி விட்டீரே! நீர் அறியாமைக் காலத்துப் பழக்கம் குடிகொண்டிருக்கும் மனிதராகவே இருக்கிறீர்! உங்களுடைய அடிமைகள் உங்களின் சகோதரர்களாவர். அல்லாஹ்தான் அவர்களை உங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கிறான். எனவே ஒருவரின் சகோதரர் அவரின் அதிகாரத்தின் கீழ் இருந்தால் அவர், தாம் உண்பதிலிருந்து அவருக்கும் புசிக்கக் கொடுக்கட்டும். தாம் உடுத்துவதிலிருந்து அவருக்கும் உடுத்தக் கொடுக்கட்டும். அவர்களின் சக்திக்கு மீறிய பணிகளைக் கொடுத்து அவர்களைச் சிரமப்படுத்த வேண்டாம். அவ்வாறு அவர்களை நீங்கள் சிரமமான பணியில் ஈடுபடுத்தினால் நீங்கள் அவர்களுக்கு உதவியாய் இருங்கள்' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்' (இதனால்தான் நான் அணிவது போன்று என் அடிமைக்கும் உடை அளித்தேன்) என அபூதர் (ரழி) அவர்கள் கூறினார்" என மஃரூர் குறிப்பிட்டுள்ளார். (ஆதாரம்: புஹாரி)

ஆகவே இஸ்லாத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய சகோதரத்துவத்தைப் பேணி இறை அருளைப் பெற்றுக் கொள்வோம்.

பிந்த் இஸ்மாயீல்...

## மென்மையான சுபாவத்தின் சிறப்பு

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக யாஸிர் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 'எவர் மென்மையை விட்டும் தடுக்கப்பட்டாரோ அவர் நன்மையை விட்டும் தடுக்கப்பட்டவராவார். (அல்ஹதீஸ்)

அதாவது மக்களுடன் பழகும்போது மென்மை மிகவும் முக்கியமானது. ஏனெனில் எல்லா விவகாரங்களிலும் மென்மையான சுபாவம் தான் மனிதனுக்கு சரியான அளவுகோலையும் நுட்பமான சிந்தனையையும் அளிக்கக்கூடியதாக உள்ளது.

மென்மையான போக்கை மேற்கொள்ளும் மனிதன் செயற்களத்தில் நன்மையையும் தீமையையும் சரியாக அறிந்து செயற்படும் நிலை கிடைக்கப்பெறும்.

ஒரு தடவை ஸஹ்ல் பின் சஆத் (ரழி) அவர்கள், நிதானம் அல்லாஹ்வின் மூலம் ஏற்படுத்தப்படுவதாகவும் அவசரம் ஷைத்தான் மூலம் ஏற்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

நிதானம் என்பதானது, எதிர்ப்படும் விவகாரங்களில் அமைதியானதும் பதற்றமற்றதுமான போக்கை கையாள்வதில் அவசரத்தை தவிர்ப்பதைக் குறிக்கும். நன்கு சிந்தித்து பொருத்தமான முடிவை எடுக்க அறிவுக்கு நல்ல அவகாசம் கொடுப்பதே நிதானம். ஆனால் அவசரம் என்பது ஷைத்தானால் ஏற்படுத்தப்படுவதாக உள்ளது.

நிதானம் தொடர்பான மற்றொரு ஹதீஸில், மற்றொரு கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நிதானம் என்பது உலக விவகாரங்களில் தான் ஆறஅமர சிந்தித்து செயற்படுவதைக் குறிக்கும்.

ஆனால் மறுமைக்குரிய அமல்களில் அவற்றை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

நற்செயல்களை முடிந்த வரையில் உரிய நேரத்தில் நிறைவேற்றி முடிப்பதே அறிவுடைமை. அதனைப் பெரும் பாக்கியமாகக் கருதிட வேண்டும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: அபூதாவூத், அஹமத்)

இதேவேளை நபி (ஸல்) அவர்கள், எவர் இலகுவானவராகவும் மென்மையானவராகவும் இருக்கிறாரோ அவரை அல்லாஹ் நரகிலிருந்து விடுவிக்கிறான்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: பைஹகி)

அதனால் எல்லோருடனும் முகமலர்ச்சியுடன் உரையாட வேண்டும். எப்பொழுதும் புன்னகையுடன் இருக்க வேண்டும். கடுகடுத்த முகத்துடனும் இறுக்கமான மனதுடனும் இருக்கும் போது செய்கையான பாவனையும் தவிர்க்கப்பட வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள், நற்குணத்தையும் அதிக மௌனத்தையும் கற்றுக்கொள்வீராக... என் உயிர் எந்த இறைவனின் வசம் கையிலிருக்கிறதோ அவன் மீது சத்தியமாக... இவ்விரண்டு குணங்களைப் போன்று வேறு எதன் மூலமும் மனித படைப்பு அழகு பெறுவதில்லை. (அல் ஹதீஸ்)

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஆயிஷாவே... உனது கோபத்தையும் சந்தோஷத்தையும் நான் நன்கறிவேன்' என்று கூற நான், 'அல்லாஹ்வின் தூதரே... அது எப்படி?' என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால் முஹம்மதின் இறைவனின் மீது சத்தியமாக.... கூறுவீர்கள் தானே... அதேபோன்று நீங்கள் கோபமாக இருந்தால் இப்றாஹீம் நபியின் இறைவனின் மீது சத்தியமாக... அப்படியில்லை என்று கூறுவீர்கள் தானே... (இதன் மூலம்) அறிந்து கொள்கிறேன்' என்றார்கள். அதற்கு நான், 'நீங்கள் சொல்வது சரியே....' என்றார்கள். (ஆதாரம் புஹாரி).

தம்முடைய மனைவி ஆயிஷா (ரழி) அவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் நடந்துகொண்ட மிக உயர்ந்த நற்குணம் இது.

தொகுப்பு: ஜத்து மைஸரா அப்துல் காதிர்...

## ஜும்ஆ நாளின் மேன்மை

ஜும்ஆ நாள் பல்வேறு சிறப்புக்களையும் மகத்துவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இது தொடர்பில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பல சந்தரப்பங்களில் எடுத்துக்கூறியுள்ளார்கள்.

அந்த வகையில் ஒரு தடவை, 'ஒருவர் ஜும்ஆ நாளில் கடமையான குளிப்பை போன்று குளித்து விட்டுப் பள்ளிவாசலுக்கு வந்தால் ஒரு ஒட்டகத்தை அல்லாஹ்வின் பாதையில் குர்பானி கொடுத்தவர் போலாவார். இரண்டாம் நேரத்தில் வந்தால் ஒரு மாட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். மூன்றாம் நேரத்தில் வந்தால் கொம்புடைய ஆட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். நான்காம் நேரத்தில் வந்தால் ஒரு கோழியைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். ஐந்தாம் நேரத்தில் வந்தால் முட்டையைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். இமாம் பள்ளிக்கு வந்து விட்டால் வானவர்கள் ஆஜராகிப் போதனையைக் கேட்கின்றார்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்நபிமொழியை அறிந்து கொண்ட பின்னரும் நாம் ஒட்டகத்தைத் தெரிவு செய்யாமல் இருக்க முடியாது.

ஜும்ஆ நாளில் பரிசு தருவதற்காக பதிவுகளை மேற்கொள்ள வரும் மலக்குகள் 'ஜும்ஆ நாள் வந்ததும் பள்ளிவாசலின் ஒவ்வொரு வாசலிலும் மலக்குகள் நிற்கின்றனர். முதன் முதலில் வருபவரை அடுத்து வருபவரைப் பதிவு செய்கின்றனர். இமாம் (மிம்பரில்) உட்கார்ந்ததும் தங்கள் ஏடுகளைச் சுருட்டிக் கொண்டு உரையைக் கேட்க அவர்கள் வந்து விடுகின்றனர்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

அதனால் வெள்ளிக்கிழமைகளில் பள்ளிவாசலுக்கு வரும் மலக்குகளின் பதிவேட்டில் நம் பெயர்கள் பதியப்படவென நாம் இமாம் மிம்பரில் ஏற முன்பே பள்ளிவாசலுக்கு வந்துவிட வேண்டும். அதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மலக்குகளின பட்டியலில் எமது பெயர் பதியப்படுவது என்பது எவ்வளவு மக்கத்துவத்துக்கும் பெருமைக்கும் உரியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் வெள்ளிக்கிழமைகளில் இமாம் ஜும்ஆ சொற்பொழிவு நிகழ்த்தும் போது, உன் அருகிலிருப்பவரிடம், வாய் மூடு என்று கூறினால் நீ வீணான காரியத்தில் ஈடுபட்டு விட்டாய் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்நபிமொழியின் படி ஜும்ஆ சொற்பொழிவு இடம்பெறும் போது அமைதியாகவும் மௌனமாகவும் இருப்பது இன்றியமையாததாகும்.

அதேநேரம் ஒரு ஜும்ஆ அதை அடுத்து வரும் ஜும்ஆ வரையிலும் மேலும் மூன்று நாட்கள் வரையிலும் (செய்த பாவங்களுக்கு) பரிகாரமாகும். ஏனெனில் மகத்துவமும், கண்ணியமும் பொருந்திய அல்லாஹ் 'நன்மை செய்தவருக்கு அது போன்ற பத்து மடங்கு (பரிசு) உண்டு. தீமை செய்தவர் தீமை செய்த அளவே தண்டிக்கப்படுவார்' என்று (அல் குர்அனின் 6:160 வசனத்தில்) கூறுகின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: அபூதாவூத்)

ஆகவே ஜும்ஆ நாளின் மகத்துவத்தையும் சிறப்பையும் அறிந்து செயற்படுவதில் கவனம் செலுத்துவோம். அதன் ஊடாக ஜும்ஆ நாள் தாங்கியுள்ள நன்மைகளையும் சிறப்புக்களையும் அடைந்து கொள்ளலாம்.

அப்துல்லாஹ்...

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 14

### குறள் தரும் சிந்தனை



இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்

என்னதான் எல்லையற்ற வசதிவாய்ப்புகள், வலிமையான துணைகள் உடையவராக இருப்பினும், தகுதியிற் சிறந்த சான்றோரின் சினத்தை எதிர்த்துத் தப்பிப் பிழைக்க முடியாது.

# கொவிட் தொற்றை தவிர்ப்பதில் கூடுதல் அவதானம் அவசியம்

வெசாக் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. இது பௌத்த மக்களின் முக்கிய பண்டிகையாகும். 2019 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டில் இப்பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல், 2020 ஆம், 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 பெருந்தொற்று மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி என்பன இப்பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட இடமளிக்கவில்லை. கடந்த நான்கு வருடக் காலப்பகுதியில் இவ்வருடம்தான் இப்பண்டிகையை அச்சம் பீதியின்றி கொண்டாடுவதற்கான வாய்ப்பை பௌத்த மக்கள் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் இப்பண்டிகையை தேசிய பண்டிகையாக அரசாங்கம் அறிவித்து அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. கடந்த வருட ஆரம்பப் பகுதியில் முகம்கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்றுவரும் இந்நாடு, பொருளாதார மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ள சூழலில்தான் இந்நாட்டு பௌத்த மக்கள் இப்பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

இந்நாட்டிலும் இந்தியா உள்ளிட்ட இப்பிராந்தியத்தின் ஏனைய சில நாடுகளிலும் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையில் மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டு வருவது அவதானிக்கப்படுகிறது. இலங்கையிலும் கூட இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை தரவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்நிலைமை குறித்து விஷேட கவனம் செலுத்தியுள்ள இலங்கை சுகாதார அமைச்சு, கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு அவதானிக்கப்படுவதால் அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படைச் சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுள்ளது.

தற்போதைய சூழலில் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவது அவசியம். இத்தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தும் தடுப்பூசி நாட்டில் பெரும்பகுதியினருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு இருப்பதால் இது அச்சுறுத்தலாக இருக்காது. இவ்வைரஸின் தொற்றுக்கு உள்ளாவதை முழுமையாகத் தவிர்த்துக் கொள்ள முடியாது என்று தொற்றுநோயியல் தடுப்பு பிரிவின் பொறுப்பாளர் டொக்டர் சமித கீகனகே குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மையும் ஆகும். இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியைப் பெற்று இருந்தாலும் நோய் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதுதான் மருத்துவர்களின் கருத்தாகும்.

அதனால் தற்போதைய சூழலில் சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை கடைப்பிடித்து ஒழுகுவது பொதுமக்களின் பொறுப்பாக உள்ளது. ஏனெனில் இத்தொற்றானது ஆளுக்காள் தொற்றிப் பரவும் ஒரு தொற்று நோயாகும். அந்நோய் 2019 ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவின் வூஹான் பகுதியில் தோற்றம் பெற்றதோடு குறுகிய காலப்பகுதிக்குள் முழுஉலகிலும் பரவியது. அத்தோடு அதன் தாக்கங்களும் பாதிப்புகளும் உலக மக்களை கிலி கொள்ளச் செய்தன. அதனால் மக்கள் செய்வதறியாது திகைத்திருந்தனர். நாளை என்ற நம்பிக்கையை இழந்திருந்தனர்.

இவ்வாறான சூழலில் 2020 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி அவசரப் பயன்பாட்டின் நிமித்தம் புழக்கத்திற்கு வந்தது. அதனைத் தொடர்ந்து இத்தொற்றின் செல்வாக்கும் தாக்கமும் பலவீனமடைந்தன. அதன் ஊடாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் தோற்றம் பெற்றன. அத்தோடு இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களில் இருந்து மக்கள் தூரமாகவும் தொடங்கினர்.

இத்தொற்று முழுமையான கட்டுப்பாட்டு நிலையை இன்னும் அடையவில்லை என்பதை மக்கள் மறந்து செயற்படலாயினர். மீண்டும் தலைதூக்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த வண்ணமே இத்தொற்று உள்ளது என்பதை மறந்துவிடலாகாது. இதற்கு இந்தியாவிலும் சில தென்னாசிய நாடுகளிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு நல்ல எடுத்துக்காட்டாகும்.

அதனால் கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான சுகாதார தரப்பினரின் அறிவுரைகளை பின்பற்றத் தவறலாகாது. 2021 ஆம் ஆண்டின் தமிழ்_ சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் சுகாதார அமைச்சு விடுத்திருந்த அறிவுறுத்தலை மக்கள் பொருட்படுத்தாமல் நடந்து கொண்டதன் விளைவாக புத்தாண்டின் பின்னர் இத்தொற்று தீவிரநிலையை அடைந்ததோடு முடக்கங்களையும் முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு நாடு உள்ளானதை மக்கள் மறந்தும் இருக்க மாட்டார்கள்.

ஆகவே அவ்வாறான அனுபவங்களுக்கேற்ப தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு வெசாக் பண்டிகைக் காலத்தில் இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்குமாறு சுகாதார அமைச்சு விடுத்துள்ள வேண்டுகோள் குறித்து உச்சபட்ச கவனம் செலுத்த வேண்டும். அதன் ஊடாக இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தலைத் தவிர்த்துக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். அதுவே இப்போதைய தேவையும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# உள்ளத்து ஆசைகளை அகற்றி, தீங்குகள் இழைக்காமல் வாழ்வதே புண்ணியம்



## இன்று வெசாக் தினம்

உலகின் துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஆசைதான் என்ற உன்னத தத்துவத்தினை உலகுக்கு போதித்தவர் புத்தர் பெருமான். அவரது போதனைகளில் அஹிம்சை, ஜீவ காருண்யம், அன்பு, ஒழுக்க விழுமியம் போன்ற நற்பண்புகளும் பௌத்த மதகோட்பாடுகளுக்குள் அடங்கியுள்ளன.

பௌத்த மக்களின் புனித வெசாக் பண்டிகை ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் கொண்டாடப்படுகின்றது.

புத்தர் பெருமான் நேபாளத்தின் லும்பினியில் கி.மு.560 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சுத்தோதன மன்னனுக்கு மகனாக அவதரித்தார். இவரது இளமைப் பெயர் சித்தார்த்தர்.

இளமைக் காலத்தில் சுகபோகங்களை அனுபவிக்க வேண்டிய தனது 29ஆவது வயதில் வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு துயருற்றார்.

மானிட வாழ்வின் நிலையற்ற தன்மையினை அத்துன்பங்கள் உணர்த்தின. நிலையான மெய்ஞானத்தினை தேடி முற்றும் துறந்து துறவியாக மாறிய அவர் புத்தர் என்ற மேன்மை பெற்றார்.

நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பொருளுக்கும், சுகத்திற்கும் போராடும் மாந்தர்களுக்கு வாழ்வின் உண்மையான அர்த்தங்களைப் போதித்து வந்தவர் புத்தர் பிரான்.

வாழ்வில் ஏற்படும் துன்பங்களுக்குக் காரணம் மெய்ப்பொருள் பற்றிய அறிவின்மையே எனப் போதித்தார் புத்தர் பெருமான். நிரந்தரமற்ற சிற்றின்பம் மீதுள்ள பற்றே அறியாமை உருவாக வழியமைக்கின்றது என்றார் புத்தர் பிரான்.

தியான வழிமுறை ஊடாக மனஅமைதியினையும் தெளிவையும் பெறுவதன் மூலம் அறியாமை என்னும் இருள் நீங்கி மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ முடியும் என்பதையே கௌதம புத்தரின் போதனை எடுத்தியம்புகின்றது.

## ஒழுக்க விழுமிய வாழ்வுக்கு உன்னத தத்துவங்களை போதித்தவர் புத்தர் பெருமான்

புனிதம் நிரம்பிய இந்த நன்னாளில் கேளிக்கைகளைத் தவிர்த்து அமைதி, தியானம், வழிபாடு ஆகியவற்றில் ஈடுபடுத்திக் கொள்வது மேலான வாழ்வுதனைத் தரும்.

வெசாக் தினம் என்றவுடன் எம் எல்லோருக்கும் நினைவிலும் வருவது மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தோரணங்களும் பந்தல்களும் எண்ணெய் விளக்குகளும் ஆகும். வியக்க வைக்கும் நுட்பமான கலைநயம் நிறைந்த வியத்தகு பிரமாண்ட படைப்புக்கள் அவையாகும்.

புத்த பெருமான் இவ்வுலகில் அவதரித்து, மக்களைத் துன்பங்களில் இருந்து மீட்பதற்காக ஆற்றிய பணிகள் பற்றிய வரலாற்று ஆவணங்கள் இந்த அலங்கரிக்கப்பட்ட மின்விளக்குகளினூடாக சித்தரிக்கப்பட்டு இளம் தலைமுறையினருக்கு விளக்கிக் கூறப்படுவது சிறப்பம்சமாகும்.

இந்த ஒரு வார காலத்தில் இலங்கையின் பௌத்த சமய வழிபாட்டுத் தலம் அமையப் பெற்றுள்ள ஒவ்வொரு இடத்திலும் விசேட ஆராதனையுடன் நற்போதனைகளும் இடம்பெற்று வருவதுடன் ஏராளமான பௌத்தர்கள் கலந்து கொள்வதும் சிறப்பம்சமாகும். இந்த சமய நிகழ்வுடன் இணைந்ததாக ஏழை எளியவர்களுக்கு உணவுகளும் பானங்களும் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

மனிதர்களுள் மாணிக்கமாகத் திகழ, குரோதமற்ற பண்பினை மேலோங்கச் செய்கின்ற இவ்வாறான செயற்பாடுகள் வெசாக் தினத்தின் சிறப்பம்சங்களாகும். புண்ணியம் செய்வதே சிறந்த அறம் என்கின்றார் புத்தர் பெருமான்.

புண்ணியங்களை பற்றி அற்பமாக நினைக்காதீர்கள். நீர் துளிதுளியாக கொட்டினாலும் நீர்க்குடம் நிறைந்து விடுகின்றது. எனவே தீமைகளைச் செய்யாதீர்கள் என புத்தபிரான் போதித்துள்ளார். இன்றைய தினம் புனிதம் நிறைந்தது. உலகின் இன்றைய துன்பங்கள் அனைத்தும் நீங்க வேண்டுமென அனைவரும் பிரார்த்திப்போம்!

# ஓய்வுபெற்று சென்றுள்ள ஆசிரியர்களை கௌரவித்த முன்னாள் மாணவர்கள்

## பேத்தாழை விபுலானந்தா கல்லூரியில் நெகிழ்ச்சியான வைபவம்

கல்குடா வலயத்திலுள்ள பேத்தாழை விபுலானந்தா கல்லூரியில் கடந்த காலத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் மேற்படி பாடசாலையில் இடம்பெற்றது.

2000 ஆம் வருட க.பொ.த சாதாரண தர மாணவர்களால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட இந்நிகழ்வில் மேற்படி பழைய மாணவர்களுக்கு தரம் 1 தொடக்கம் இறுதி வரை கற்பித்த 20 ஆசிரியர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, பாண்ட் வாத்திய இசையுடன் வரவேற்று அழைத்து வரப்பட்டனர்.

அவர்களுக்குக் கற்பித்த காலஞ்சென்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும், உயிரிழந்துள்ள சில மாணவர்களுக்குமான அஞ்சலி நிகழ்வுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் துரதிர்ஷ்டவசமாக கலந்து கொள்ள முடியாதுள்ள ஏனைய ஆசிரியர்களும், தொழிலின் நிமித்தம் வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களும் இணையமூடாக இணைந்து தமது கருத்துக்களைப் பரிமாறியிருந்தனர்.

அத்துடன் இப்பழைய மாணவர்களால் தற்போது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் ஒரு தொகுதியினருக்கான காலணிகள், புத்தகப் பைகள், கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் நிகழ்விற்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்களின் கரங்களினால் வழங்கப்பட்டிருந்தன.

பழைய மாணவர்கள் தாங்கள் அந்நாளில் கல்வி கற்ற ஆசிரியர்களுடன் ஒன்றாக நின்று புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்காதிருந்தமை பெரும் குறையாக இருந்தது. அக்குறையினை அன்றைய மாணவர்கள் இந்நிகழ்வின் போது நீக்கிக் கொண்டனர். அவர்கள் தங்களது முன்னாள் ஆசிரியர்களுடன் ஒன்றாக நின்று குழுப் புகைப்படங்களை எடுத்துக் கொண்டனர். அப்புகைப்படத்தின் பிரதிகளை ஆசிரியர்களுக்கும் வழங்கி, ஆசிரியர்களின் கரங்களினால் தாங்களும் பெற்றுக் கொண்டனர்.





பழைய மாணவர்கள் தங்களது அன்றைய ஆசிரியர்களிடமிருந்து ஆசிகளையும் பெற்றுக் கொண்டமை ஓர் நெகிழ்ச்சியான விடயமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரகாஷ்...

# முன்பள்ளி மழலைகளின் கல்வித் தேவைகள்; கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கூட்டம்

முன்பள்ளி மழலைகளின் கல்வித் தேவைகள் பற்றிய கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 இற்கு ஆனந்தபுரம் கிழக்கில் உள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

சவிரி பூலோகராஜா (அதிபர், கிளிநொச்சி மத்திய கல்லூரி) மங்கலவிளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார். கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் இறைவணக்கம் இசைப்பர்.

கந்தசாமி முருகவேள் (கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர், கல்விக் குழுமம்) வரவேற்புரை வழங்குவார். தலைமையுரையை நாகலிங்கம் வேதநாயகன் (தலைவர், கல்விக் குழுமம், முன்னாள் யாழ் அரசாங்க அதிபர்) ஆற்றுவார்.

'ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழிப் பயிற்சிகள்' என்ற தலைப்பில் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்) உரையாற்றுவார்.

'Attitudes of the Secondary school students towards the writing skills in English Language' என்ற தலைப்பில் திருமதி வைத்திலிங்கம் (Master Trainer, Zonal Education Office, Valikamam) உரையாற்றுவார்.

'பாடசாலைக் கல்வி முறைகளில் அதிகரித்துவரும் சமமின்மைகள்' என்ற தலைப்பில் பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி (முன்னாநாள் பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்) உரை நிகழ்த்துவார்.

சுப்ரமணியம் பரமானந்தம் (பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), சந்திரமௌலீசன் லலீசன் (அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை), வேல் நந்தகுமார் (துணை ஆசிரியர், கல்விச்சுடர், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை), அருள் உமாமகேஸ்வரன் (செயலாளர், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. வட மாகாணம்), தம்பிராசா குருகுலராஜா (முன்னாள் கல்வி அமைச்சர் வட மாகாணம்) வைத்திய கலாநிதி T. சத்தியமூர்த்தி (பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) உட்பட பலரும் கருத்துரைகளை வழங்குவர்.

கூட்டத்தில் சமூகம் அளிக்க விரும்புவோர் 0776 320 996 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# வன்முறையினால் பற்றியெரியும் மணிப்பூர்; தமிழர்களின் வீடுகள், கடைகளும் தீக்கிரை!



## இராணுவம் வரவழைப்பு; இரவில் ஊரடங்கு

இந்திய மாநிலமான மணிப்பூரில் மைத்தேயி இன மக்களை பழங்குடியின மக்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இது தொடர்பான போராட்டத்தில் வன்முறை வெடித்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்று மணிப்பூர். மலைகளையும் சமவெளிகளையும் கொண்ட அழகிய மாநிலமான மணிப்பூர் தற்போது பற்றி எரிகிறது. மணிப்பூரில் உள்ள மைத்தேயி இனக்குழுவினரை பழங்குடியின மக்கள் பட்டியலில் சேர்க்க குக்கி இனமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இருதரப்பும் தங்களது கோரிக்கைகளையும் எதிர்ப்பையும் முன்வைத்து மணிப்பூர் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இந்தப் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. மணிப்பூரின் பல மாவட்டங்களில் குக்கி இனத்தவர், மைத்தேயி இனக்குழுவினரை குறிவைத்து தாக்குதல் நடத்தத் தொடங்கினர். இருதரப்புக்கும் இடையே மோதல் வெடித்து கலவர பகுதியாக மாறியது. இந்த மோதல், மியன்மார் எல்லை நகரமான மோரேவுக்கும் பரவியது. இந்தப் பகுதியில் தமிழர்கள் அதிகம் வசித்து வருகின்றனர். மணிப்பூரில் இரு பிரிவினர் இடையே நடக்கும் இந்த மோதலால் தமிழர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. மணிப்பூர் பற்றி எரியத் தொடங்கியதால், தற்போது வன்முறையைக் கட்டுப்படுத்த இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது. இணையசேவை 5 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளது. இரவு ஊரடங்கும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மக்கள் கூட்டமாக கூட தடை விதித்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. பாதுகாப்புப் படையினர் வன்முறை பாதித்த கிராமங்களில் இருந்து சுமார் 7,500 பேரை மீட்டுள்ளனர்.

பா.ஜ.க ஆட்சி நடைபெற்று வரும் மாநிலம் மணிப்பூர் ஆகும். மணிப்பூரின் மொத்த மக்கள் தொகையில் மைத்தேயி இன மக்கள் 53 சதவீதம் பேர் வசித்து வருகின்றனர். ஆனால் மாநிலத்தின் மொத்த பரப்பளவில் வெறும் 10 சதவீதத்தில்தான் இவர்கள் வசித்து வருகிறார்கள். அதேவேளையில், மணிப்பூர் மக்கள் தொகையில் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்கும் பழங்குடிகள் 90 சதவீத பகுதிகளில் வசித்து வருகிறார்கள். மாநில சட்டப்பேரவையில் மைத்தேயி இனத்தை சேர்ந்தவர்களே பெரும்பான்மையாக இருக்கிறார்கள்.

மியன்மார் மற்றும் வங்காளதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக குடியேறுபவர்களால் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் இதனால் தங்களை பழங்குடியின மக்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதும் மைத்தேயி மக்களின் கோரிக்கையாக உள்ளது. ஆனால், இதற்கு நாகாஸ், ஸோமிஸ், குக்கி ஆகிய பழங்குடியின மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மணிப்பூரில் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் வாழும் மோரே நகரில் ஏற்பட்ட வன்முறையில் ஏராளமான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாக தகவல்கள் வந்துகொண்டு இருக்கின்றன. மோரே நகரில் இனமோதலில் சிக்கிய 25 தமிழர் வீடுகள், கடைகள் தீக்கிரையாகியுள்ளன.

# முஸ்லிம்களின் தேசிய, சமூக மேம்பாட்டுக்காக சமூக அந்தஸ்திலுள்ளவர்கள் பங்காற்ற முன்வருதல் வேண்டும்

## அமைச்சர் அலி சப்ரி...



முஸ்லிம்களின் தேசிய, சமூக விவகாரங்களில் புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள் சமூக மேம்பாட்டுக்காக பங்காற்ற முன்வருதல் வேண்டும் என்று வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். ஆர். பி. எஸ். எல். கொன்சோட்டியம் அமைப்பின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டம் மருதானை சாஹிராக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட இவ்வமைப்பின் ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவரான வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி பிரதான உரையினை நிகழ்த்தினார்.அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின் இரண்டாவது அமர்வு உப தலைவர் வஸீர் முக்தார் தலைமையில் "முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம்" என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா, முன்னாள் வெளிநாட்டுத் தூதுவரும் முன்னாள் கொழும்பு மாநகர முதல்வருமான உமர் காமில், தென்கிக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, முன்னாள் நீதிபதி ஜனாதிபதி சட்டத்தரணி சலீம் மர்சூக் ஆகியோர் பங்கேற்றனர்.

சிறப்பு மார்க்கச் சொற்பொழிவினை பேருவளை ஜாமிய்யா நளீமியா கலாபீடத்தின் பணிப்பாளர் அகார் முஹமத் உரையாற்றினார். ஹக்கீம் அபூபக்கர் இந்நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.நன்றியுரையினை சட்டத்தரணி ரிஸ்வி மரைக்கார் நிகழ்த்தினார். இதன் போது பாகிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், முன்னாள் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம். எம். நாஜிம், பேராசிரியர் நௌபல், தொழிலதிபர் முஸ்லிம் சலாஹுதீன், முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி, முன்னாள் கண்டி மாநகர உப தவிசாளர் இலாஹி ஆப்தீன், உப தலைவர் சைபுதீன் ஹனிபா, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சாமிலா தாவூத், இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் பொறியியலாளர் எம். எம். எம் முனவ்வரா பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் எம். எஸ். எம். ராசிக், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி தாசிம் , பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாயர் கலாநிதி எம். இஸட் எம். நபீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் ஆர். பி. எஸ். எல். கொன்சோட்டியம் அமைப்பிற்கான விசேட இணையத்தளமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் தேசிய வரைபடத்திற்குள் முஸ்லிம் சமூகத்தின் இருப்பை எந்த இடத்தில் பதிக்க வேண்டும் என்பதுதான் மிக முக்கியமான அம்சமாகும். அந்த வேலைத் திட்டத்தை முஸ்லிம் சமூகத்தின் புத்திஜீவிகளாலும் மற்றும் துறை சார்ந்தவர்களின் மூலம் தான் மேற்கொள்ள முடியும். இதற்கான காரணம் என்னவென்றால் இந்தியாவினுடைய அரசியலையும் அமெரிக்காவினுடைய அரசியலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எப்பொழுதும் ஓர் நேர் கோட்டில் பயணிப்பதில்லை. அரசியல் காரணி என்பது சமூகத்தின் மீது செல்வாக்கு செலுத்தக் கூடியதாகும். பல்லின சமூக மக்கள் வாழும் இந்நாட்டில் அரசியலின் தாக்கம் இல்லாமற் செய்ய முடியாது. அது காலத்திற்கு காலம் நாட்டின் தேசிய வரைபடத்தை முதன்மைப்படுத்தி பல்வேறு விதமான வடிவங்களில் தோற்றம் பெறும்.

அக் கால கட்டத்தில் அதற்கு முகம்கொடுத்து அவர்களோடு ஒன்றித்துப் பயணம் செய்து அச்சவால்களை முறியடிப்பதற்கான மதிநுட்பங்களை கையாண்டு அதனை வெற்றிகொள்வதற்கான வழிவகைகளை நாங்கள் தான் வகுத்துக் கொள்ள வேண்டும். கால ஓட்டத்திற்கு ஏற்ப இடம்பெறும் நிகழ்வுகளை தடுத்து நிறுத்த முடியாது.

அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன் மக்கள் ஆதரவு பெற்று இன்று ஆட்சி செய்த போதிலும் தற்போது கடந்த ஆட்சி செய்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவர்களுக்கு செல்வாக்கு அதிகரித்து வருகிறது. இதே போன்றுதான் இந்தியாவின் அரசியல் நிலையும். இதுதான் யதார்த்தம். இந்த யதார்தத்தை உணர்ந்து கொண்டு ஒரு சிறுபான்மையாக வாழும் சமூகம் தனது பாதுகாப்பையும் தனது இருப்பையும் நிலைநாட்டுவதற்கு அச் சமூகத்தின் புத்திஜீவிகளின் பங்களிப்பு மிக அவசியமாகும். எத்தகைய விடயங்களாக இருந்தாலும் முரண்பட்டு சமூகத்திற்காக எதையும் சாதிக்க முடியாது. எல்லா சமூகத்தினர்களோடும் ஒன்றித்து பயணம் செய்வதன் மூலம் தான் எமது இலக்குகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். ஆர். பி. எஸ். எல் கூட்டமைப்பின் இரண்டாவது விசேட அமர்வு உப தலைவர் வசீர் முக்தார் தலைமையில் இடம்பெற்றது. 'பன்மைத்துவ இலங்கைக்கான முன்னோக்கிய பாதை குறித்து புத்திஜீவிகள் மற்றும் துறை சார்ந்தவர்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இதில் தலைமையுரை நிகழ்த்திய வசீர் முக்தார்...

R.P.S.L. என்ற கூட்டமைப்பானது உயிர்த்த ஞாயிறு ஏப்ரல் தாக்குதலின் போது உருவாக்கப்பட்டதாகும். அக்கால கட்டம் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம், சிவில் தலைமைத்துவம் சகல நடவடிக்கைகளும் முடக்கப்பட்ட நிலையில் இருந்தன. இந்த இக்கட்டான நிலையில் இருந்து மக்களை மீளவும் சமநிலைப்படுத்தி ஏனைய சமூகங்களோடு சேர்ந்து பயணிப்பதற்கான பொது அமைப்பு ஒன்று அவசியம் தேவைப்பட்டது. இதில் அரசியல் தலைமைத்துவங்கள், புத்திஜீவிகள், துறை சார்ந்தவர்கள் எனப் பல்துறை சார்ந்த தரப்பினர்களையும் உள்ளடக்கியதாக ஒரு கூட்டமைப்பை ஸ்தாபித்தோம். இதன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும், அவமானங்களையும் சமநிலைப்படுத்தி மீளவும் இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வருவதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் எல்லோரும் ஒன்றிணைந்து முஸ்லிம் சமூகத்தினுடைய ஒரு பொது நோக்கை அடைந்து கொள்வதற்காக தோற்றுவிக்கப்பட்ட ஓர் பொது அமைப்பு. ஒரு பொதுத் தளம் என்று கூறலாம். குறிப்பாக எந்த ஒரு சிவில் அமைப்பும் தனித்தனியாக இயங்கிய போதிலும் பல தரப்பினர்களுடைய ஆலோசனைகளை உள்வாங்கி தத்தமது இலக்குகளை அடைவதற்கு கூட்டாக நின்று செயற்படக் கூடிய பொதுத்தளம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த சிறப்பு அமர்வில் பன்மைத்துவ இலங்கையின் சமூக மேம்பாட்டில் அறிஞர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் பங்கு மற்றும் தேசிய நிகழ்வுகளில் ஆர்.பி.எஸ்.எல் கூட்டமைப்பின் வகி பாகம் என்னவாக அமைய வேண்டும் என விவாதிக்கப்பட்டது. தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா முஸ்லிம் சமூகத்தை வலுவூட்டல் மற்றும் திறன் மேம்பாடு என்ற தலைப்பில் பேசினார். ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி கலாநிதி ஜனாதிபதி சட்டத்திரணி சலீம் மார்சூப் கல்வி மற்றும் விழிப்புணர்வு என்ற தலைப்பில் பேசினார். வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பொது வாழ்க்கையிலும் அரசியலிலும் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் என்ற தலைப்பிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கலாசாரம் மற்றும் மொழியை அங்கீகரித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் என்ற தலைப்பிலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரும் உயர் ஸ்தானிகருமான திருமதி பேரியல் அஷ்ரப் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் திறன் மேம்பாடு சமூக முன்னேற்றத்தில் முஸ்லிம் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் உரையாற்றினர். கொழும்பு முன்னாள் மாநகர முதல்வரும் முன்னாள் வெளிநாட்டுத் தூதுவர் உமர் கமில், உரையாடல் மற்றும் தகவல்தொடர்பு கூட்டணிகள் மற்றும் நெட்வெர்க்குகளை உருவாக்குவதில் ஈடுபடுதல் என்ற தலைப்பில் பேசினார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா சட்ட பாதுகாப்புகள் மற்றும் பாதுகாப்புகள் என்ற தலைப்பில் உரையாற்றினார்

பெண்களுக்கான அதிகாரம், கல்வி, கலாசார பாதுகாப்பு, சட்டப் பாதுகாப்பு, தகவல் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் குழுக் கலந்துரையாடல் நடைபெற்றது. குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு தலைப்பிலும் நுண்ணறிவுப் பார்வைகளை வழங்கினர் மற்றும் பன்மைத்துவ சமுதாயத்தில் சமூக முன்னேற்றத்தை அடைவதில் விடாமுயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இந்த சவால்களை எதிர்கொள்ள கூட்டு முயற்சியின் அவசியம் குறித்து அவர்கள் உரையாற்றினார்கள்.

R.P.S.L கூட்டமைப்பின் முதல் வருடாந்த பொதுக் கூட்டம் ஒரு வெற்றிகரமான நிகழ்வாக அமைந்தது, மேலும் இது போன்ற பல நிகழ்வுகளில் எல்லாத் தரப்பினர்கள் கலந்து கொண்டமை இதுவே முதலாவதாக இருக்கும் எனவும் கருதப்படுகின்றது. சமூக மேம்பாட்டை அடைவதில் விடாமுயற்சி, ஒத்துழைப்பு மற்றும் தொலைநோக்கு சிந்தனை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை குழு உறுப்பினர்கள் வலியுறுத்தினர். R.P.S.L கூட்டமைப்பு இந்த விடயத்தில் முக்கிய பங்கை ஆற்றி வருகின்றதுடன், இலங்கையில் சாதகமான மாற்றத்திற்கான உந்து சக்தியாக அது தொடர்ந்தும் இருக்கும் என நம்பப்படுகிறது என்று இங்கு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டவர்கள் முன்வைத்தார்.

அதேவேளையில் இங்கு விசேட மார்க்கச் சொற்பொழிவினை பேருவளை ஜாமியா கலா பீடத்தின் பணிப்பாளர் ஏ. சி. அகார் முஹமட் உரையாற்றிய போது,..

நீங்கள் எல்லோரும் சிறந்த மனிதர்கள், அதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை. ஏனென்றால் நீங்கள், இந்த நாட்டிலும் சரி எமது சமூகத்திலும் சரி சிறப்பான அருள்களைப் பெற்றவர்கள். ஆனால் ஒரு பெரிய உண்மையை இந்த இடத்தில் சொல்ல வேண்டும். எந்தவொரு பாக்கியமாக இருந்தாலும் அமானிதமாக இருந்தாலும் அது ஒரு சோதனை. அது பற்றி நாங்கள் கட்டாயம் விசாரிக்கப்படுவோம். இங்கே அல்லாஹ்வின் அருள்களைப் பெற்றவர்கள் கூடியிருக்கின்றோம். அதேவேளை எமக்கு வழங்கப்பட்ட அருள்களெல்லாம் அமானிதம் என்ற உண்மையை நாம் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு அல்லாஹ்வின் அருளைப் பெற்ற அனைவரும் சோதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதை உங்கள் அனைவருக்கும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

நாளை மறுமை நாளில் நான்கு கேள்விகள் கேட்கப்படும். அந்த நான்கு கேள்விகளுக்கும் பதில் சொல்லாமல் யாருடைய பாதங்களும் நகராது. ஒரு மனிதன் தான் பெற்ற அறிவின் மூலம் என்ன செய்தான். அவன் என்ன சாதித்தான். தனது சமுதாயம் பெற்றுக் கொண்ட பிரயோசனம் என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். அவர் பெற்றிருந்த பதவி, பட்டம், தகைமை, தனக்கு கிடைத்திருந்த அங்கீகாரத்தைக் கொண்டு அவர் என்ன சாதித்தார். என்ன நன்மையைச் செய்தார் என்ற கேள்விக்கு கண்டிப்பாக அவர் பதில் சொல்ல வேண்டும் என்று நபி நாயகம் (ஸல்) அவர்கள் கூறுயிருக்கிறார்கள். நாம் எல்லோரும் சும்மா இருக்க முடியாது. தான் உண்டு. குடும்பம் உண்டு. வருமானம் தனக்கு பதவி உண்டு, சமூக அங்கீகாரம் உண்டு என்று வாழ முடியாது. பதவிகள் தகைமைகளும் உயர உயரப் பொறுப்புகள் அதிகம். இங்கு வருகை தந்துள்ள அத்தனை பேரும் எமது சமூகத்தின் மிகப் பெரிய வளம். அல்லாஹ் உங்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தைக் கொடுக்க வேண்டும். நீங்கள் சாதாரண மக்கள் போல் இருக்க முடியாது. நீங்கள் நாட்டுக்கும் சமூகத்திற்கும் பாரிய பங்களிப்பை நல்க வேண்டிய கடப்பாடுகள் உடையவர்களாக இருக்கின்றீர்கள் என்பதை இங்கு வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்பால் அலி


SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB

CEYLON TEA
SYMBOL OF QUALITY

பசுமை தேயிலை விழா
2023

பெருந்தோட்ட அமைச்சு
இலங்கைத் தேயிலைச் சபை

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து, தேயிலை தொழிற்துறையின் செழிப்புக்காக சூரியனுக்கு நன்றி தெரிவித்து பிரார்த்தனை செய்து,
சிங்கள இந்து புத்தாண்டுக்குப் பின்னர் அறுவடை செய்யப்பட்ட முதல் அறுவடையின் முதல் பகுதி பூஜை செய்யப்படுகிறது.

தேசிய புனித விழா

பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்
லொஹான் ரத்வத்த அவர்களின் பங்கேற்புடன்,
பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர்
டாக்டர்.ரமேஷ் பத்திரன அவர்களின் தலைமையில்

வெசாக் மாதம் 06 ஆம் திகதி
மு.ப.10.00 மணிக்கு

வரலாற்று சிறப்புமிக்க
கொட்டபொல கெட்டபரு ரஜ மகா விகாரையில்

தேசிய விழாவை ஒட்டி, அன்றைய தினத்தில் ஒன்றாக இணைந்து நாடு முழுவதும் கலாச்சார நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையில் அந்தந்த மத வழிபாட்டுத்தளங்களின் தலைமைத்துவத்துடன் பூஜை நடைபெறவுள்ளது !

| | |
|---|---|
| கம்பளை பிராந்திய அலுவலகம் சார்பாக | மு.ப.10.00 மணிக்கு கண்டி ஸ்ரீ தலதா மாளிகை |
| நுவரெலியா பிராந்திய அலுவலகம் சார்பாக | மு.ப.8.00 மணிக்கு சுவர்ணகிரி விகாரை |
| | மு.ப.11.00 மணிக்கு சீதை அம்மன் கோவில் |
| | பி.ப.3.00 மணிக்கு தூய திரித்துவ ஆலயம் |
| இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் சார்பாக | மு.ப.9.30 மணிக்கு சபரகமுவ மகா சமன் தேவாலயம் |
| பதுரலிய பிராந்திய அலுவலகம் சார்பாக | மு.ப.9.00 மணிக்கு அளுத்கம கந்தே விகாரை |
| பண்டாரவளை பிராந்திய அலுவலகம் சார்பாக | மு.ப.8.00 மணிக்கு பதுளை முத்தியங்கண ரஜ மஹா விகாரை |
| கம்பளை பிராந்திய அலுவலகம் சார்பாக | மு.ப.11.30 மணிக்கு அம்பரபொல ஜும்மா பள்ளிவாசல் |

இந்த பசுமை தேயிலை விழாவில் கலந்துக்கொள்ள
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.....!

செயலாளர் - பெருந்தோட்ட அமைச்சு
தலைவர் - இலங்கைத் தேயிலைச் சபை

# கும்புக்கந்துறை அல்-ஹிக்மா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் வெற்றிப் பயணம்



பாடசாலை முதல்வர் F.M. ரஷாத் (நளீமி) SLPS, BA, PGDE, DSM (NIE), MTL (NILIS)

**கண்டி, திகன நகரத்துக்கு அண்மையில் அமைந்துள்ள எழில் மிகு கிராமமே கும்புக்கந்துறை. இவ்வூரின் கல்வியின் முன்னோடிகளாக இந்தியா, காயல் பட்டணம் சென்று கல்வியைக் கற்று வந்தவர்களான லெப்பை ஆலிம் பெரியாரின் மகன் லெப்பை கனி லெப்பை ஆலிம், சம்சுதீன் ஆலிம் மற்றும் பதுார்தீன் ஆலிம் ஆகியோர் திகழ்கின்றனர்.**

ஆரம்ப காலங்களில் இவ்வூர் மக்கள் சுமார் இரண்டு மயில் தூரமுள்ள கங்கைவெல எனும் இடத்தில் நடாத்தப்பட்ட தமிழ் வகுப்புகளுக்கு சென்று கற்றதோடு ஏனைய சிலர் பல்லேகல தோட்டத் தொழில் பாடசாலையிலும் மற்றும் சிலர் தெல்தெனிய தும்பர வித்தியாலயத்திலும் கல்வி கற்றுள்ளனர்.

கும்புக்கந்துறைக்கு ஒரு பாடசாலை வேண்டுமென ஜனாப் L.L.A. ஜெலீல் முதன் முதலில் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தவராவார். அதனைத் தொடர்ந்து கிராமத்து மக்களின் அயராத முயற்சியில் 1939.11.06 கன்சபா சபையால் 5★15 தற்காலிக கட்டடம் ஊர் மக்களாலும், கன்சபா சபையால் 50★20 முதலாவது கட்டடம் கட்டப்பட்டது. இப்பாடசாலையை அமைப்பதற்கான காணியை பன்விலையில் வசித்த திருமதி. ரஹ்மதும்மா காதர் முஹித்தீன் என்பவர் நன்கொடையாக வழங்கினார். அவரை தொடர்ந்து கண்டி, பன்விலையில் வசித்த யூஸூப் கும்புக்கந்துறைக்கு வழங்கப்பட்ட காணியும் இப்பாடசாலையின் தேவைக்காக

மற்றும் நலன்விரும்பிகள் மற்றும் அனைவரையும் இத்தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

பாடசாலையின் தற்போதைய முதல்வர் F.M. ரஷாத் (நளீமி) மிகச் சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிவருகிறது. அத்தோடு சகல வசதிகளுடன் கூடிய பிரதான மண்டபம், கலவன் பாடசாலை என்ற நடத்தை மாற்றல், ஆங்கிலம், சிங்கள மொழி மூலங்களை ஆரம்பித்தல், விஞ்ஞான பீடம், தொழில் நுட்ப பீடம், பெண்களுக்கான இன்டோர் விளையாட்டு மைதானம், சகல வகுப்புக்களுக்கும் ஸ்மாட் பலகை போன்ற எதிர்கால திட்டங்களாகும்.

## பாடசாலையின் தோற்றம்

06.11.1939

★ தரம் 08 வரை அனுமதி

1957

★ மைதானம் உருவாக்கம்

1959





ஆசிரியர் குழாம்



ணத்தில் கிரிக்கெட் சம்பியன் கிரீடத்தை கைப்பற்றியமை.

1993

★இரண்டாவது முறையாக மத்திய

D.L.M ஹனீபா

1940.06.04 முதல் தற்காலிக உதவி ஆசிரியை.

செல்லம்மா சின்னையா

★முதல் மாணவன்

A.M.செய்யது காஸிம் (அபுல் ஹஸன்)

★பாடசாலைக்கு முதலில் காணி வழங்கியவர்

அப்துல் கபூர்

★க.பொ.த. (சா/த) ஆரம்பிக்கப்பட்டது

1960

★மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது

1970.04.08

★க.பொ.த. (உ/த) கலைப் பிரிவு

T. சியானா

★முதன் முதலில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக் கழகம் சென்றவர்

R.F. ராழியா

3A (2008)

★முதன் முதலில் கல்வியற் கல்லூரிக்கு சென்றவர்

K.F சப்னா

2B.C (2012)



ஊடகப் பிரிவு (ஆண்கள்)



மாணவத் தலைவிகள்



மாணவத் தலைவர்கள்



தேசிய மாணவச்சிப்பாய் படையணி



SDEC உறுப்பினர்கள்

இணைக்கப்பட்டது. அதன் பின்னர் அரத்தனையில் வசித்த பிரபல தனவந்தர் யூனூஸ் என்பவராலும் காணி நன்கொடையாக வழங்கப்பட்டது. இக்காணியின் பெரும்பாலான பகுதி விக்டோரியா நீர் தேக்கத்தில் மூழ்கிவிட்டது.ஸூலைமா உம்மா அப்துல் கபூர் என்பவரின் காணி விளையாட்டு மைதானத்திற்காக வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் அரசினர் கலவன் பாடசாலையாக இருந்த அலிகார் முஸ்லிம் வித்தியாலயம் என்ற நாமத்துடன் இயங்கியதோடு பின்னர் கும்புக்கந்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம் என்றும் 2007.1.22 முதல் அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம் என்ற நாமத்துடன் இன்று வரை செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப் பாடசாலை 84 வருட வரலாற்றைக் கொண்டுள்ளது.அடிப்படைத் தேவைகள், வளங்களை விருத்தி செய்யும் நோக்கில் பழைய மாணவர்களின் 'மீண்டும் ஒரு நாள் பாடசாலை நினைவுகளுடன்' என்ற தொனிப்பொருளில் 2023.05.06 சனிக்கிழமை பழைய மாணவர்களும், இங்கு சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்களின் ஒன்று கூடல் நிகழ்வும் நடைபெறும்.

இந்த பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பல் துறைகளிலும் சிறப்புற்று விளங்கின்றனர்.

பாடசாலையின் வெற்றிகளுக்கு பின்னால் முழு மூச்சாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், எம்பவரிங் அல்ஹிக்மா உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவிகள்

★ தரம் 10 வரை அனுமதி

01.01.1960

★ முதன் முதலில் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு ஆண்கள் தோற்றியமை

1961 டிசம்பர்

★ஆண்கள், பெண்கள் பாடசாலையென இரண்டாக பிரிக்கப்பட்டது.

01.03.1962

★முதன் முதலில் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு பெண்கள் தோற்றியமை.

1965 டிசம்பர்

★ஆண்கள் பாடசாலையும் பெண்கள் பாடசாலையும் மீண்டும் கலவன் பாடசாலையாக ஒன்றிணைக்கப்பட்டது.

01.07.1966

★ஆண்களும் பெண்களும் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு பெண்கள் தோற்றியமை.

1966 டிசம்பர்

★15 வருடங்களின் பின் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை சித்தி.

1993

★முதன் முறையாக மத்திய மாகாணத்தில் கிரிக்கெட் சம்பியன் கிரீடத்தை கைப்பற்றியமை.

1994

★ஹாஜி முஹிதீன் நூல் நிலையம் கட்டப்பட்டது.

17.05.1994

★முதன் முதலில் க.பொ.த. உயர் தர பரீட்சைக்கு தோற்றியமை

1994

★ஆசிய அபிவிருத்தி உதவியுடன் அதிபர் விடுதி, விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் படிகள், இரண்டு மாடி கட்டடம் போன்றவை கட்டிமுடிக்கப்பட்டது.

1996

★அகில இலங்கை ரீதியாக கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டமை.

1999

★கால்பந்தாட்டப் போட்டியில் வலய மட்டத்தில் 17 வயதுக்கு கீழ் சம்பியன்

2014



அல் ஹிக்மா உதைப்பந்தாட்ட அணி

1992.07.15

★க.பொ.த. (உ/த) வர்த்தகப் பிரிவு

2003

★புலமை பரீட்சையில் முதல் சித்தியடைந்த மாணவன்

M.H.A ரஷீத் 1952



## பாடசாலை வரலாற்றின் முதன்மைகள்

★06.11.1939 பாடசாலையின் தலைமை ஆசிரியர்

★புலமை பரீட்சையில் முதல் சித்தியடைந்த மாணவி

M.H.A. சபீனா 1978

★முதல் சாரணர் இயக்க ஆசிரியர்

A.H.M சாஹூல் ஹமீத்

★முதன் முதலில் புலமைப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்

எம்.என்.எப். ஹஸீனா 2012

177 புள்ளிகள்

★முதன் முதலில் க.பொ.த. (சா/த) அதிகூடிய பெறுபேற்றை பெற்ற மாணவி

M.R.F. ரிபானா

9A (2018)

★முதன் முதலில் க.பொ.த. (சா/த) அதிகூடிய பெறுபேற்றை பெற்ற மாணவன்

M.F.M. பஸ்லி

8A, B (2019)

★முதன் முதலில் க.பொ.த. (உத) பரீட்சையில் கலைப் பிரிவில் சித்தி பெற்று பல்கலைக் கழகம் சென்றவர்.



## பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை அதிபர்களாக கடமையாற்றியவர்கள்

| No | Name | Years From | Years To |
|---|---|---|---|
| 01 | D.L.M. Haneefa | 06.11.1939 | 01.05.1942 |
| 02 | Sawary Muthu | 02.05.1942 | 01.05.1943 |
| 03 | Iyyar | 01.05.1943 | 23.01.1947 |
| 04 | Sinna Thambi | 24.01.1947 | 09.02.1947 |
| 05 | S. Kandhaiya | 10.02.1947 | 30.04.1957 |
| 06 | G.S.M. Haneefa | 01.05.1957 | 19.07.1959 |
| 07 | A.M.M. Muhseen | 20.07.1959 | 03.01.1960 |
| 08 | N.M.M. Maharoof | 04.01.1960 | 14.07.1970 |
| 09 | Mrs.H.U. Haneefa | 03.05.1962 | 18.11.1963 |
| 10 | Mrs.S.M. Sihaudeen | 22.13.1963 | 01.07.1964 |
| 11 | Mrs. J.U. Abusaly | 01.07.1964 | 01.07.1966 |
| 12 | M.K.M. Ismail | 16.07.1970 | 16.08,1972 |
| 13 | S.L.M. Haneefa | 27.07.1970 | 16.08.1978 |
| 14 | S.M. Thaha | 16.08.1972 | 28.02.1973 |
| 15 | A.H.M. Rasheed | 31.10.1986 | 31.12.1986 |
| 16 | M.I.M. Marhoom | 01.03.1973 | 15.01.1978 |
| 17 | N.M.M. Maharoof | 16.01.1978 | 31.10.1986 |
| 18 | M.H.M. Zakariya | 01.01.1987 | 31.12.1990 |
| 19 | M.N.M. Akram | 23.01.1991 | 31.12.1991 |
| 20 | A.L.A. Jaleel | 01.01.1992 | 06.01.1997 |
| 21 | M.H.A. Sameeu | 09.01.1997 | 05.03.1997 |
| 22 | M.A. Jalaldeen | 06.03.1997 | 22.03.1998 |
| 23 | M.N.M. Akram | 23.03.1988 | 05.06.2000 |
| 24 | T.G.U.M. Nilabdeen | 06.06.2000 | 23.04.2004 |
| 25 | Mrs. S.N. Rafideen | 26.04.2004 | 25.04.2005 |
| 26 | T.G.U.M. Nilabdeen | 25.04.2005 | 28.05.2008 |
| 27 | A. Abdul Nasar | 29.05.2008 | 03.07.2013 |
| 28 | F.M. Rashad | 03.07.2013 | 07.08.2019 |
| 29 | S.M.A.Nasar | 08.08.2019 | 24.08.2019 |
| 30 | A.F.M. Riswan | 24.08.2019 | 20.12.2019 |







சதுர்தீன் (j.p)
மாத்தளை சுழற்சி நிருபர்

# நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதி






(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் திறன் விருத்தி செயற்திட்ட (CDLG) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 6 மாதகால நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் விழா செவ்வாய்க்கிழமை (02) திருகோணமலை ஹிந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.மேலும், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்னாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, பிரதிப் பிரதம செயலாளர்களான (நிர்வாகம்) ஆ.மன்சூர், ஆளணி மற்றும் பயிற்சி (திருமதி) ஆர்.யு. அப்துல் ஜலீல் உள்ளிட்ட மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள், மாகாண ஆணையாளர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான 6 மாதகால டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டதற்கமைவாக, அதில் தெரிவு செய்யப்பட்டவர்களில் 56 பேர் குறித்த பயிற்சி நெறியை முழுமையாக நிறைவு செய்திருந்தனர். அவர்களுக்கான சான்றிதழ்கள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

குறிப்பாக, உள்ளூராட்சி நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியில் அதி சிறப்பு தேர்ச்சி பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்று மாநகர சபையின் செயலாளர் ஏ.எம்.ஹபீபுர் ரஹ்மான் மற்றும் க.கருணாகரன் ஆகியோருக்கு பிரதம அதிதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் பாராட்டப்பட்டு அவர்களுக்கான ஞாபகச் சின்னம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

## கிழக்கின் குரல்

# யுனிசெப் நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(சாய்ந்தமருது விசேட நிருபர்)



கல்முனை கல்வி வலயத்தில் பொருளாதர உதவி தேவைப்படும் பாடசாலை மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (unicef) உதவியுடன் கற்றல் உபகரணங்கள் இரண்டாம் தொகுதி செவ்வாய்க்கிழமை (2) வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எச். பௌஸ், எம்.எச். றியாசா, கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.எப்.நஸ்மியா சனூஸ், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலீக், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான யூ.எல். எம். சாஜீத், ஏ. அஸ்மா மலிக், ஏ. சஞ்சீவன் மற்றும் ஏ.எல்.எம். ஜஹாங்கீர் ஆசிரிய ஆலோசகர் ஏ. றாஸீக் (முறைசாராக் கல்வி) அத்துடன் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஏறாவூரில் போதைக்கு எதிரான துண்டு பிரசுர விநியோக நிகழ்வு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்ட செயலகம், ஏறாவூர் பிரதேச செயலகம், இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை பொலிசார் இணைந்து புதன் கிழமை (03) போதைக்கு எதிரான சுவரொட்டி பிரசாரமும், துண்டு பிரசுர விநியோக நிகழ்வும் ஏறாவூர் பொலிஸ் நிலைய சந்தியில் ஏறாவூர் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் உட்பட மாவட்ட, பிரதேச செயலக, இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள இதமளி ஆதரவு மையத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1926 பொறிக்கப்பட்டு, போதைக்கு எதிரான வாசகங்கள் உள்ளடங்கிய ஸ்டிக்கர்கள் பிரதேச பொதுப் போக்குவரத்து வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன், வீதிகளில் பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

இத்திட்டம் யாழ்ப்பாண மாவட்ட மருத்துவ பீட பழைய மாணவர் சங்க நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து பிரதேச செயலகங்களுக்கு ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூரில் புத்தக கொண்டாட்டம்

ஏறாவூர் வாசிப்பு வட்டமும் ஏறாவூர் நகர சபையும் இணைந்து நடாத்தும் ஏறாவூர் புத்தக கொண்டாட்டம் இன்று வெள்ளிக்கிழமை (05) முதல் 14 வரை ஏறாவூர் வாவிக்கரையோரம் அமைந்துள்ள டாக்டர் அஹமட் பரீட் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

புத்தகங்கள் விற்பனை, கண்காட்சி என்பதையும் தாண்டி பல சமூகங்களின் கலாசார நிகழ்வுகளும் நடாத்தப்படவுள்ளன.

தமிழ், ,சிங்கள பாரம்பரிய கலைகள், புத்தக வெளியீடுகள், ஆய்வுக் கருத்தரங்குகள், திரையிடுதல், உரையாடல்கள், சிறுவர்களுக்கான தனி அரங்குகள், சமகால தமிழ், சிங்கள இலக்கியங்கள், சிங்கள சினிமாக்கள், சமூகங்களுக்கிடையிலான ஆரோக்கியமான உரையாடல்கள், வாசிப்பை மேம்படுத்தும் வகையிலான மாணவர்களுக்கான நிகழ்வுகள், பட்டிமன்றம் என பலவகையான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பாசிக்குடா நிருபர்)

வாகநேரியில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சுற்றுலா விடுதி வாகநேரியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான க.ஜெயந்தன் வயது (24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புதன்கிழமை (3) வழக்கம் போல் மாடு கட்டும் தொழிலுக்கு சென்று வீடு திரும்பும் வழியில் வீட்டின் அருகாமையில் நின்ற யானையே இவரை தாக்கியுள்ளது.

தாக்குதலுக்குட்பட்டவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்பவ இடத்திற்கு சென்ற வாழைச்சேனை பொலிசார், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி வ.இரமேஸ்ஆனந்தன் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டனர்.

காட்டு யானையின் தாக்குதலால் உயிரிழந்துள்ளதாக தெரிவித்த மரண விசாரணை அதிகாரி, பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிசாருக்கு பணிப்புரை விடுத்தார்.

சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும், கடந்த 3 நாட்களுக்கு முன்பும் வீதியால் சென்ற நபர் ஒருவரை துரத்தி துரத்தி தாக்கியதாக பொது மக்கள் தெரிவித்தனர்.

## ஸ்ரீ நகரில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாடு

# தீவிரப்படுத்தப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

எதிர்வரும் 23ஆம் திகதி காஷ்மீரின் ஸ்ரீ நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ள ஜி20 நாடுகளுக்கான சுற்றுலா நடவடிக்கைகள் குழுக் கூட்டத்துக்கான விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை காஷ்மீர் யூனியன் அரசு மத்திய அரசின் உதவியோடு மேற்கொண்டு வருகிறது.

ஜி20 உறுப்பு நாடுகளில் சீனாவைத் தவிர ஏனைய நாடுகளின் சுற்றுலா தூதுக்குழுக்கள் 22ம் திகதி ஸ்ரீநகர் வந்தடையும் என்றும் மறுநாள் ஸ்ரீ நகர் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாடு நடைபெறும் என்றும் மறுதினம் காஷ்மீரின் முக்கியமான இடங்களை அவர்கள் பார்வையிடுவார்கள் என்றும் ஏற்பாட்டாளர்கள் ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இம்முக்கிய நிகழ்வுகளில் எந்த வித அசம்பாவிதங்களும் நடந்துவிடக் கூடாது என்பதற்காக சகல முன் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் பாதுகாப்பு ஆய்வு தொடர்பான கலந்தாலோசனைகள் நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஸ்ரீ நகரின் எல்லா சந்திகளிலும் ரோந்துப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ட்ரோன்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க ட்ரோன் எதிர்ப்பு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என்றும் தூதுக் குழுவினர் விஜயம் செய்யக்கூடிய டால் ஏரி, டச்சிகாம் வனவிலங்கு சரணாலயம், பனிச்சறுக்கு இடம்பெறும் குல்மார்க், மாநாட்டு மண்டப பகுதி எங்கும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக டெக்கான் ஹெரால்ட் தெரிவித்துள்ளது.

# சூடான் உள்நாட்டு போர்; 31 இலங்கையர் ஜித்தா வருகை

## இலங்கைக்கான சவூதி தூதுவர் தெரிவிப்பு

மர்லின் மரிக்கார்





சூடானில் உள்நாட்டு போருக்கு மத்தியில் சிக்குண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளைப் பாதுகாப்பாக மீட்டு அழைத்துவரும் நடவடிக்கையின் கீழ் இற்றைவரையும் 31 இலங்கையர், 246 சவூதி அரேபிய பிரஜைகள் அடங்கலாக 103 நாடுகளைச் சேர்ந்த 5865 பேர் ஜித்தாவுக்கு வந்து சேர்ந்துள்ளனர் என்று இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்துள்ளார்.

சூடானில் உள்நாட்டு போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து அங்கு சிக்குண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளை பாதுகாப்பாக மீட்டு ஜித்தாவுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் குறித்து குறிப்பிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், சவூதி அரேபிய அரசின் தலைமைத்துவ வழிகாட்டுதலின் கீழ் இந்த மனிதாபிமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பணிகளின் நிமித்தம் சவூதி அரேபியாவின் முப்படையினரும், அதிகாரிகளும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதோடு, தமது விமானங்களையும், கப்பல்களையும் சவூதி அரேபியா ஈடுபடுத்தியுள்ளது.

அந்த வகையில் மன்னர் மக்கா, மன்னர் ஜுபைல் ஆகிய கப்பல்கள் மூலம் 7 சவூதி பிரஜைகள் உட்பட 229 பேர் நேற்று முன்தினம் மாலையில் ஜித்தாவை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு சூடானில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு ஜித்தாவுக்கு அழைத்து வரப்படும் இலங்கை பிரஜைகள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டு பிரஜைகளும் அவரவர் நாடுகளுக்குப் புறப்படுவதற்குத் தயாராகும் வகையில் அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் சவூதி அரேபியாவினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்களை அனுப்பி வைப்பதற்காக அந்தந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும், சவூதியிலுள்ள அந்நாடுகளது தூதரகங்களோடும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# ஷங்காய் கோர்பரேஷன் வெளியுறவு அமைச்சர் மாநாடு இன்று கோவாவில் ஆரம்பம்

## ரஷ்ய வெளியுறவு அமைச்சர் பங்கேற்பு

இன்றும் நாளையும் கோவாவில் நடைபெறவுள்ள ஷங்காய் கோர்பரேஷன் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சர்ஜி லொவ்ரோவ் கலந்து கொள்ளவுள்ளார் என்று மொஸ்கோ தெரிவித்துள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் ரஷ்ய அமைச்சர், இந்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

ஷங்காய் கோர்பரேஷன் அமைப்பு என்பது, சீனா, இந்தியா, உஸ்பெஸ்கிஸ்தான், தஜிகிஸ்தான், பாகிஸ்தான், கஸகஸ்தான், கர்ஜிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பொருளாதார கூட்டு அபிவிருத்திக்கான அமைப்பாகும்.

இந்த வெளிவிவகார அமைச்சர் மாநாட்டில், பயங்கரவாதத்தை எதிர்கொள்ளல், ஆப்கானிஸ்தானில் ஸ்திரத்தன்மை உட்பட பல விடயங்கள் கவனம் பெறவுள்ளன.

எதிர்வரும் ஜூலை 3 மற்றும் 4ம் திகதிகளில் ஷங்காய் உச்சிமாநாடு புதுடில்லியில் நடைபெறவுள்ளது. உறுப்பு நாட்டின் தலைவர் என்ற வகையில் ரஷ்ய அதிபர் புட்டின் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார். எனினும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு திருப்திகரமாக இல்லாத சூழலில் சீனா ஜனாதிபதி ஸிஜின்பிங் இந்த உச்சிமாநாட்டில் நேரில் கலந்து கொள்வாரா, என்பதில் நிச்சயமில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் யுத்தத்தின் பின்னர் ரஷ்ய அதிபர் முதல் தடவையாக இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.




மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலையின் வைர விழா இறுதி நிகழ்வுகள் அதிபர் எச்.எல். சிராஜுதீன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றன. அதிபர், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு மற்றும் பாடசாலை வரலாறு அடங்கிய விசேட தினகரன் வெளியீடு, பாடசாலை இணையத்தளம் ஆரம்பித்தல் போன்ற நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன. (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த கழிவு தேயிலை மீட்பு

(கம்பளை நிருபர்)

கம்பளை வெலம்பொட கெட்டகும்புர பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கழிவு தேயிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கம்பளை அதிரடி படை முகாமுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அதிரடி படையினர் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

வெலம்பொட கெட்டகும்புர பிரதேசத்தில் சூட்சுமமான முறையில் கழிவு தேயிலையை மறைத்துவைத்திருந்த நிலையில், கம்பளை அதிரடி படையினர் சுற்றி வளைத்தனர்.

இதன்போது 2200 கிலோ கழிவு தேயிலை மீட்கப்பட்டுள்ளது. மேலும் கம்பளை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தேயிலையை பரிசோதனை செய்து அவ்விடத்திற்கு சீல் வைத்துள்ளனர்.

# இரத்தினபுரி மாவட்ட அரச வெசாக் நிகழ்வு

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)



அரசாங்கத்தின் வெசாக் நிகழ்வை முன்னிட்டு இரத்தினபுரி வீரகொட விகாரையில நேற்று முன்தினம் விசேட நிகழ்வுகள் ஆரம்பமானது. இந்நிகழ்வுகள் தொடர்ந்து எதிர்வரும் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் மத குருமார்கள், சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன, மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணத்திலிருந்து டுபாய்க்கு வாழைக்குலைகள் ஏற்றுமதி


*யாழ். விசேட நிருபர்*

நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்திலிருந்து டுபாய்க்கு வாழைக்குலைகளை ஏற்றுமதி செய்யவுள்ளதுடன், இந்தத் திட்டத்தின் அறிமுக நிகழ்வு, யாழ். நிலாவரை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (03) நடைபெற்றது.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்து கதலி வாழைக்குலைகளை கொள்வனவு செய்து, அவற்றை நிலாவரை வாழைப்பழங்கள் சுத்திகரிப்பு நிலையத்தில் பதப்படுத்தி, அங்கிருந்து துறைமுகத்துக்கு கொண்டு சென்று, டுபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

முதற்கட்டமாக 10 ஆயிரம் கிலோ வாழைக்குலைகளை வாரந்தோறும் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமானது அநுராதபுரம், இராஜாங்கனை வாழைப்பழ ஏற்றுமதி திட்டத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய திட்டமாக உள்ளது. இதன் மூலம் நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைப்பதுடன், விவசாயிகளும் நன்மையடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.



இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைக்கோரலுக்கான அழைப்பு

**ஒப்பந்தப் பெயர்**

1. **B11 வீதிக்கு (59+850 - 60+350 கி.மீ) மேலடுக்கை அஸ்பால்ட் கொங்கிறிட் வழங்குதல் மற்றும் இடுதல்**
2. **B11 வீதிக்கு (60+350 - 60+850 கி.மீ) மேலடுக்கை அஸ்பால்ட் கொங்கிறிட் வழங்குதல் மற்றும் இடுதல்**

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-05-12ஆம் திகதி முதல் 2023-05-19ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கல் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் **www.rda.gov.lk** எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# போசாக்கு குறைபாட்டினால் வடமாகாணத்தில் சிறுவர் பாதிப்பு

*கோப்பாய் குறூப் நிருபர்*



இலங்கையில் போசாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைக் கொண்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுவதுடன், அதிலும் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான சிறுவர்கள் போசாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, வடமாகாண ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா தெரிவித்தார்.

வடமாகாணத்தில் சுமார் 1,600 முன்பள்ளிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை (02) முதல் 3 மாதங்களுக்கு இலவசமாக சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில், யாழ். கொக்குவிலிலுள்ள முன்பள்ளியொன்றில் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றிய போது,

"இலங்கையிலுள்ள சிறுவர்களின் உணவு, ஆரோக்கியம் தொடர்பான புள்ளிவிபரத் தகவலில் வடமாகாணத்தில் சிறுவர்கள் போசாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கு அதிகம் மாப்பொருள் அடங்கிய உணவுகளை பெற்றோர் தினமும் வழங்குகிறார்கள். இதனால் சிறுவர்கள் வெளித்தோற்றத்துக்கு பொழிவானவர்களாகக் காணப்பட்டாலும், அவர்களின் ஆரோக்கியத்துக்குத் தேவையான புரதம், கொழுப்பு, அயன் சத்துகள் குறைந்து காணப்படுகின்றன.

இதேவேளை, மன்னாரில் சிறுவர்களின் போசாக்கு மட்டம் சாதகமான குறிகாட்டியைக் காட்டுகிறது. ஏனெனில், அங்கு மாப்பொருள் சார்ந்த உணவுகள் குறைவாக கிடைப்பதுடன், கடல் உணவுகளே அதிகமாகக் கிடைக்கின்றன.

சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியம் தொடர்பாக முன்பள்ளிப் பருவத்திலிருந்தே கவனம் செலுத்த வேண்டும். சிறுவர்களின் மூளை வளர்ச்சி 4 வயது முதல் 7 வயதுவரை காணப்படும் நிலையில், அவர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்க வேண்டுமென்பதுடன், கிரகிக்கும் ஆற்றலையும் வளர்க்க வேண்டும்.

ஆகவே, சிறுவர்களின் ஆரோக்கியத்தை பேணுவதற்கு பெற்றோரும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

# வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ். சாவகச்சேரி, நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (07) காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதன்போது, புதிய நிர்வாகத் தெரிவு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தலைமை உரை, கிராம அலுவலரின் உரை, கலாசார உத்தியோகத்தரின் உரை நிகழ்த்தப்படவுள்ளதுடன், செயலாளர் கூட்டறிக்கை மற்றும் பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

**கிளிநொச்சியில்**

# வனவள திணைக்களத்தின் கீழுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை

*பரந்தன் குறூப் நிருபர்*



கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தினதும் வனஜீவராசிகள் திணைக்களத்தினதும் கட்டுப்பாட்டிலுள்ள விவசாய மற்றும் தனியார் காணிகள் ஓரிரு மாதங்களில் விடுவிக்கப்படுமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை (05) நடைபெற்ற போதே, அவர் இதனைக் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக உரிய அமைச்சருடன் பலகட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதுடன், அண்மையில் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1985ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வரைபடத்துக்கமைய, காணி நிர்ணயம் செய்வதற்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இதன் அடிப்படையில், வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் விடுவிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

# யாழ். ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்பு!



*யாழ். விசேட நிருபர்*

வலிகாமம் வடக்கு தையிட்டி பிரதேசத்திலுள்ள தனியார் காணியொன்றில் புதிதாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றுமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்டவர்களை பொலிஸார் முற்றுகையிட்டதைக் கண்டித்து, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலிருந்து சிலர் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை (04) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கூட்டத்தில் பங்குபற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் , த.சித்தார்த்தன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்டோர் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

## பகிரங்க விற்பனை

### பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

### அண்ணளவாக 50,000 வெள்ளை முட்டைகளை பகிரங்கமாக விற்றல்

ஹெட்டிபொல நீதிவான் நீதிமன்ற அதிகாரப் பிரதேசத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் கைப்பற்றப்பட்ட முட்டைகள் 2023.05.08ம் திகதி பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் 59(1) பிரிவின் பிரகாரம் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும்.

**இடம்: கனேஷா பாம் ஷொப் என்ட் ஹாட்வெயார்,
கிராதலான, ஹெட்டிபொல.
திகதி: 2023.05.08**

1. 2023.05.08 மு.ப. 11.00 முதல் பகிரங்கமாக விற்பனை செய்யப்படுவதுடன், கொள்வனவாளர்கள் மு.ப. 11.00 இற்கு சமுகமளித்தல் வேண்டும். அத்துடன் பின்னர் சமுகமளிக்கின்ற கொள்வனவாளர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.
2. தளத்திற்கு பிரவேசிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இல. 014-1-001-2-0110475 என்ற மக்கள் வங்கி கணக்கிற்கு மீளளிக்கப்படாத ரூ. 2000/= தொகையை வைப்புச் செய்து பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. தேர்ந்தெடுக்கப்படும் சித்திகரமான கொள்வனவாளர்/ கொள்வனவாளர்களுக்கு தம்முடன் சம்பந்தப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட முட்டைகளை உறுதி செய்யும் முகமாக அதிகார சபையினால் கடிதமொன்று அவ்வேளையிலேயே விநியோகிக்கப்படும்.
4. குறித்த கடிதம் கிடைத்த பின்பு மேற்படி 2இல் குறிப்பிடப்படும் கணக்கிற்கு காசு வைப்புச் செய்து பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் குறித்த தொகை விடுவிக்கப்படும்.
5. ஒரே விலையில் கொள்வனவு செய்வதற்காக பல கொள்வனவாளர்கள் முன்வரின் கொள்வனவாளர்களுக்கிடையில் பிரித்து வழங்கும் தீர்மானத்தை எடுத்தல் முழுமையாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு உரியது.
6. விண்ணப்பதாரிகள் விலைமனு சமர்ப்பிக்கும் போது கீழ்க்காணும் குறைந்த பட்ச விலை மற்றும் அதிகூடிய விலை பற்றிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

**முட்டைகளை எண்ணிக்கையில் விண்ணப்பிப்பதாயின்**
வெள்ளை முட்டை குறைந்த பட்ச விலை - ரூ. 39/=
வெள்ளை முட்டை அதிகூடிய விலை - ரூ. 44/=

**கிலோகிராமில் விண்ணப்பிப்பதாயின்**
வெள்ளை முட்டை 1Kg இன் குறைந்த பட்ச விலை - ரூ. 780/=
வெள்ளை முட்டை 1Kg அதிகூடிய விலை - ரூ. 880/=

அத்துடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் விதிக்கப்பட்டுள்ள 2023.04.19ம் திகதிய இல. 2328/05 வர்த்தமானியில் குறிப்பிடப்படும் அதிகூடிய சில்லறை விலையை விடக்கூடுதலான விலைக்கு விண்ணப்பிக்கும் வேண்டுதல்கள் செல்லுடியாகாது.

**பணிப்பாளர் நாயகம்,
பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை**

## கேள்வி அறிவித்தல் — மன்னார் பிரதேச சபை

### பயன்படுத்தப்பட்ட வாகனத்திற்கான ஏல விற்பனை

மன்னார் பிரதேச சபையின் பெறுகைக்குழுவின் செயலாளரினால் கீழ்வரும் பயன்படுத்தப்பட்ட கீழ்குறித்த வாகனத்தின் இயந்திரங்களின் ஏல விற்பனை தொடர்பிலான விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி** :- 05.05.2023 - 25.05.2023 வியாழக்கிழமை பி.ப 12.00 மணிவரை

**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** :- 25.05.2023 வியாழக்கிழமை பி.ப 14.30 மணிவரை

**கேள்விகள் திறக்கப்படும் திகதி** :- 25.05.2023 வியாழக்கிழமை பி.ப 15.00 மணி

| இல | வாகன இலக்கம் | வகை | கேள்வி பிணைப் பணம் (Rs.) | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் (Rs.) |
|---|---|---|---|---|
| 01 | 53-3325 | Double Purpose Vehicle | 25000.00 | 2000.00 |

- திறந்த கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
- கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தனித்தனியான உறைகளில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு 'செயலாளர், மன்னார் பிரதேசசபை, காட்டாஸ்பத்திரி,பேசாலை, மன்னார்' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் குறித்த தினத்திற்கு முன் எமக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகோரும் வாகன விபரம் குறிப்பிடப்படல் வேணடும்.
- கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், கேள்வி பிணைப்பணமும் செலுத்தி பிரதேசசபையில் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
- கேள்விப் படிவம் எடுத்து உரிய நேரத்தில் சமர்ப்பிக்காதவர்களுக்கு கேள்வி பிணைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவராவார்கள்.
- ஏலவிற்பனைக்கான வாகனத்தை 05.05.2023- 24.05.2023 வரை காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 03.00 மணி வரை அலுவலக நாட்களில் பிரதேச சபையில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் பார்வையிட முடியும்.
- சித்திபெறும் கேள்விதாரர் தங்களால் கோரப்பட்ட முழு கேள்வித் தொகையினை 08.06.2023 இற்கு முன் சபைக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்.
- சித்திபெறும் கேள்விதாரர் வாகன உரிமை மாற்றத்திற்கான ஆவணங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பித்து மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படும் C.M.T -52 சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை எமக்கு சமர்ப்பித்த பின்னரே வாகனம் தங்களுக்கு கையளிக்கப்படும்.
- கிடைக்கப்பெறும் கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**(அலுவலக தொலைபேசி இலக்கம் - 0232050001)
செயலாளர், மன்னார் பிரதேச சபை 05.05.2023**

IDM NATIONS CAMPUS (PVT) LTD

சிறப்பு பொது அறிவிப்பு

**IDM வர்த்தக முத்திரை மற்றும் வர்த்தகப் பெயரை சட்டவிரோதமாக பயன்படுத்தியமைக்காக I.D.M. Achievers International Campus Pvt Ltd ற்கு வணிக உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.**

IDM வர்த்தக முத்திரை, IDM வர்த்தகப் பெயர் மற்றும், அல்லது idm.edu இணையதள முகவரியினூடாக அறிவுசார் சொத்துரிமைகளை மீறல் தொடர்பில் No.CHC/09/2023 IP ஐக் கொண்ட வழக்கில் மணிமாறன் மகேஸ்வரன் மற்றும் I.D.M Achievers International Campus Pvt Ltd ஆகியோருக்கு எதிராக கொழும்பிலுள்ள வணிக உயர் நீதிமன்றம் தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. மேற்கூறிய உத்தரவுகள் 2023 மே 02, லிருந்து 2023 மே 16 வரை நீடிக்கப்பட்டுள்ளன.

I.D.M Achievers International Campus Pvt Ltd ஐ IDM நிறுவனங்களில் ஒன்றாகப் பிரதிநிதித்துவப்படுத்தியதாகவும், IDM Colombo Campus (Dehiwala), IDM Kandy Campus, IDM Jaffna Campus, IDM Batticaloa Campus, IDM Eastern Campus, IDM City Campus Jaela, IDM City Campus Moratuwa என்ற பெயரில் மோசடியாக கிளைகளைத் திறந்ததாகவும் வாதியின் வர்த்தகப்பெயர் மற்றும்*அல்லது வர்த்தக முத்திரையைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் மேற்படி வணிகங்களை விளம்பரப்படுத்தியுள்ளதாகவும் IDM Nations Campus Pvt Ltd (வாதி) குற்றம் சாட்டி அதன் விண்ணப்பத்தை முன்வைத்துள்ளது.

மேலும், மணிமாறன் மகேஸ்வரன் மற்றும் I.D.M Achievers அவர்களது முகவர்கள் மற்றும்/அல்லது அவர்களது ஊழியர்கள் மற்றும்/அல்லது அவர்களது பணியாளர்கள் மற்றும்/அல்லது அவர்களது பிரதிநிதிகள் மற்றும்/அல்லது, ணையத்தள பெயர்கள் மற்றும்/அல்லது விளம்பர தயாரிப்புகள், "I.D.M" மற்றும் அல்லது "IDM" என்ற பெயர் மற்றும்/அல்லது கடிதங்கள் உட்பட எந்தவொரு வணிக அடையாளங்களையும் பயன்படுத்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

முகாமைத்துவம்
IDM Nations Campus (Pvt) Ltd.

HEAD OFFICE - BAMBALAPITIYA
No. 15, Lauries Place,
Duplication Road, Colombo 04.

SENATE OFFICE - WELLAWATTE
No. 16, 42nd Lane, Wellawatte,
Colombo 06.

மேலதிக விளக்கங்களுக்கு
0112 361 801

## சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் கருத்திட்டம்

SARP

### விவசாய அமைச்சு

சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் கருத்திட்டத்தினால் கீழ்க்காணும் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்காக சண்டே ஒப்சர்வர் பத்திரிகையில் 2023.04.30ம் திகதி பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக குறித்த பதவிகளின் விடயப்பொறுப்பு மற்றும் விடயத்துறையை www.agrimin.gov.lk இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேற்படி ஆங்கில பத்திரிகை அறிவித்தல் மற்றும் இணையதளத்தை பரிசீலித்து உங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு SARP செயற்றிட்டம் வேண்டிகொள்கிறது.

**பதவிகள்**

1. விவசாய மற்றும் கால்நடை அதிகாரி
2. விவசாய வணிக மேம்பாட்டு அதிகாரி
3. இயற்கைவள முகாமைத்துவ அதிகாரி
4. நீர்ப்போசனை பிரதேச அபிவிருத்தி பொறியியலாளர்

# 'மலையக கல்வி அபிவிருத்தியில் கரிசனை' இதுவே எமது மேதின சிந்தனை

## *இங்கிரிய விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்திற்கு பெரும் தொகை நூல்கள் அன்பளிப்பு

## *30 பெருந்தோட்டப் பெண்கள் கௌரவிப்பு







களனிவெளி சமாதான இணைப்புக்குழு கல்வித்துறையில் மலையகம் அபிவிருத்தியடைய வேண்டும் எனும் இலக்கோடு வாசிப்பு பழக்கத்தை பேணி, தேடல் உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே அதன் குறிக்கோளாகும். அதனை முன்னிட்டு இங்கிரிய விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தில் மேதின நிகழ்வை அண்மையில் நடத்தியது.

தொழிலாளர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக வெடித்து சிதறிய தினமாக மேதினம் சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளது. இது வர்க்க உணர்வின் அடையாளம். உரிமை போராட்டத்தின் வெற்றியை நினைவு கூரும் நாள், அன்று 10 மணிநேர வேலை எனும் தொனிப்பொருளை சிக்காக்கோ நகரில் இடம்பெற்ற மக்கள் எழுச்சி உலகத் தொழிலாளர் சமூகத்தின் புதிய பரிமாணங்களை மேதினம் தொட்டு நிற்பது காலத்தின் கட்டாயமாகும்.

தொழிலாளர் நலன் சார்ந்த ஐ.நா பிரகடனம் சர்தேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு சாதகமான பல உரிமைகளை சட்ட வடிவமாக்கி அவர்களுக்கு பாதுகாப்பினை ஏற்படுத்தியதுதான் மேதினத்தின் சிறப்பு. இதே வேளையில் இலங்கையில் குடியேறிய 200 வருட கால வரலாற்று பதிவினை கொண்டுள்ள மலையக சமூகம் தொழில் ரீதியான வரப்பிரசாதங்களை பெற்றுள்ளது. ஆனால் சமூக மாற்றத்திற்கான சந்தர்ப்பங்களை எல்லாம் இழந்தே வந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இதற்கு காரணம் கல்வி, பொருளாதாரம் இரண்டிலும் ஏற்பட்டிருக்கும் பின்னடைவேயாகும். எனவே தான் கல்வித்துறையில் மலையகம் அபிவிருத்தியடைய வேண்டும் எனும் இலக்கோடு வாசிப்பு பழக்கத்தை பேணி, தேடல் உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இதுவே களனிவெளி சமாதான இணைப்புக்குழுவின் குறிக்கோள். இதனை கருத்திற்கொண்டு விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தில் மேதின நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

பெறுமதியானதும், அறிவு சார்ந்ததுமான ஒரு தொகுதி நூல்களை மேற்படி பாடசாலைக்கு கையளித்ததோடு மேதினத்தை நினைவுகூர்ந்து உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தை சேர்ந்த 30 பெருந்தோட்ட பெண்மணிகளை கௌரவித்தது.


இந்நிகழ்விற்கு பாடசாலை அதிபர் எம். ஆனந்தகுமார் தலைமை வகித்ததுடன், நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கை நம்பிக்கை பங்காளர் அமைப்பின் தலைவர் நோயல் அபிலாஷன் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக 'சமூக செயற்பாட்டாளர்' மோசீஷ் ஸ்டீபன், போல் மோசேஷ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சரவணராஜா ஆகியோர் உள்ளிட்ட ஆசிரிய, ஆசிரியைகள், மாணவர்கள் பெருமளவில் கலந்துக் கொண்டனர். அத்துடன், இப்பாடசாலையின் பெற்றோர் ஆசிரிய சங்க அங்கத்தவர்களும் கலந்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**தேவதாஸ் சவரிமுத்து**
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்










# இளம் எழுத்தாளர் பன்நூல் ஆசிரியர் நாளிர் ஜௌனைதீன்




கண்டி தெல்தோட்டை, பட்டியகம, பள்ளேகம என்ற சிறிய கிராமத்தில் வசிக்கும் நாளிர் ஜௌனைதீன் இளம் எழுத்தாளர் பன்நூல் ஆசிரியராவார்.இவர் மாணவர்களுக்காக 11 நுல்களையும் இஸ்லாமிய நெறி தொடர்பான பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி கலைப் பட்டதாரியானார்.2019ஆம் ஆண்டு PGDE டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும், SIBA கெம்பசில் 2021 ஆம் ஆண்டு psychological counseling டிப்ளோமாவையும், Zam Zam நிறுவனத்தின் மூலம் 2023 ஆம் ஆண்டு MINI MBA கற்கை நெறியையும் பூர்த்தி செய்து, MED கற்கை நெறியை தேசிய கல்வி நிறுவகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் ஆசிரிய மாணவராவார்.

2015 ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியராக முதல் நியமனமாக வத்தேகம வலயத்தில் பின் தங்கிய பாடசாலைகளில் ஒன்றான ஹௌலுகங்கை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியக் கடமையைப் பொறுப்பேற்றார்.2019 பிரதி அதிபராகவும் செயற்பட்டுள்ளார்.

தற்காலிக இடமாற்றமொன்றை பெற்று, கும்புக்கந்துரை அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சேவையாற்றிக் கொண்டிருந்த நிலையில் 2023.04.03 ஆம் திகதி முதல் அதே பாடசாலைக்கு நிரந்தர நியமனம் பெற்று கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

எனது எழுத்துப்பணி 1997 காலப் பகுதிகளில் ஆரம்பமானது.தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகள், அல்ஹஸனாத், உண்மை உதயம் போன்ற சஞ்சிகைகளுக்கும் கவிதைகள், சிறு கதைகளை எழுதியுள்ளார். 1998களின் பின் நூல்கள் எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டது. அதன் விளைவாக அப்போது 'சடவாதம் இஸ்லாமியக் கண்ணோட்டம்', 'போதைப் பொருளும் சீரழிந்து போகும் சமுதாயமும்', 'தஃவாவின் வழி முறைகள்', 'ஆதாரபூர்வ துஆக்கள்', 'தராவீஹ் தொழுகை', 'ஹதீஸ் தொகுப்பு', 'அல்குர்ஆன் ஸுன்னா ஒளியில் நம் தொழுகை' போன்ற நூல்களையும் 'தொழுகையை விட்ட என் தோழனே', 'சுவன மொட்டுக்களை நேசிப்போம்', 'ஷீஆக் கொள்கையின் சுருக்கப்பார்வை போன்ற மொழிபெயர்ப்புக்களை வெளியிட்டுள்ளார்.

2020 கொரோனா தாக்கத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சுய கற்றலின் மூலம் தம்மை வலுப்படுத்திக் கொள்வதற்கு உதவும் நோக்கில் பாடசாலை பாடத் திட்டத்திற்கு அமைய இஸ்லாம் நூலைத் தழுவியதாக தரம் 1 முதல் 11 வரை ஒவ்வொரு வகுப்புக்குமாக வினா, விடை நூல்களைத் தயாரித்து, மாணவ சமூகத்திற்கு வழங்கினார்.

மாணவர்களுக்காக எழுதப்பட்ட 11 நூல்களும் 02.02.2020 ஆம் திகதி முதல் 30.11.2020 வரையிலான காலப்பகுதிக்குள் எழுதி, தட்டச்சு வேலைகளையும் முடிக்க முடியுமாக இருந்தமை சாதனைக்குரிய விடயமாகவும், கொரோனா விடுமுறையை அர்ப்பணிக்க முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.இதற்காக பெரிதும் ஆர்வம் காட்டிய, அவற்றை வெளியிட்ட குறிஞ்சி பதிப்பகம், நேத்ரா புத்தக நிலையத்தின் பணிப்பாளர் ஆ. ஹில்மி ஆகியோருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

இந்நூல்களில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான நூல்களை திகன பிராந்திய கல்வி எழுச்சி மன்றத்தினால் 2021.02.14 கும்புக்கந்துரை அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தரம் 06 முதல் 11 வரையான நூல்கள் தெல்தோட்டை பல்லேகம கல்வி மன்றத்தினால் 2022.01.16 பல்லேகம அல் ஹுஸ்னா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

உயர் தரத்திற்கான இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் என்ற இரு பாடங்களுக்கும் பாடத்திட்டங்களுக்கு அமைய கடந்த கால வினாக்களும் அதற்கான விடைகளையும் கொண்ட இரு நூல்களை எழுதி முடித்துள்ளார்.

**எம். சதுர்தீன் (J.P)**
(மாத்தளை சுழற்சி நிருபர்)

# பங்களாதேஷ் அணிக்கு எதிராக இலங்கை மகளிர் இலகு வெற்றி



பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை மகளிர் அணி 58 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது.

சீரற்ற காலநிலையால் பீ. சரா ஓவல் மைதானத்தில் இருந்து எஸ்.எஸ்.சி மைதானத்திற்கு நேற்றைய (04) தினத்திற்கு மாற்றப்பட்ட இந்த ஒருநாள் போட்டி மழை காரணமாக 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணி சார்பில் அணித் தலைவி சாமரி அத்தபத்து அதிரடியாக 60 பந்துகளில் 6 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் 64 ஓட்டங்களை விளாசினார்.

ஹர்ஷிதா சமரவிக்ரம ஆட்டமிழக்காது 48 பந்துகளில் 45 ஓட்டங்களை பெற்றார். கடைசி நேரத்தில் கவிஷா டில்ஹாரி 13 பந்துகளில் 25 ஓட்டங்களை குவித்தார். அவர் கடைசி ஓவரில் மூன்று பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸரை விளாசினார்.

இதன்மூலம் இலங்கை மகளிர் அணி 30 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ் மகளிர் அணி 29.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களையே பெற்றது. இதன்போது அதிரடியாக பந்து வீசிய ஓஷதி ரணசிங்க 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி 1–0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இந்தத் தொடரின் முதல் ஒருநாள் போட்டி மழையால் கைவிடப் பட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் கடைசியுமான ஒருநாள் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெறவுள்ளது.

## அட்டாளைச்சேனை அந்–நூர் வலயமட்டத்திற்குத் தெரிவு

**அட்டாளைச்சேனை மத்திய, ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்**



அட்டாளைச்சேனை அந்–நூர் மகா வித்தியாலய அணி அட்டாளைச்சேனை கோட்ட மட்ட கால்பந்து போட்டியில் வெற்றியீட்டி, அக்கரைப்பற்று வலயமட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில், அட்டாளைச்சேனை அந்–நூர் மகா வித்தியாலயம் மற்றும் அட்டாளைச்சேனை மு.ம. வித்தியாலய அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் 1–0 என்ற கோல் அடிப்படையில் அந்–நூர் மகா வித்தியாலயம் வெற்றியீட்டியது.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்–ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹவின் ஆலோசனை, வழிகாட்டலில் அக்கரைப்பற்று கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். ஜெமீல், ஆசிரிய ஆலோசகர் எம்.எச். ஹம்மாத் ஆகியோர் இச்சுற்றுப் போட்டியை வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## காரைதீவில் நாளை கூடைப்பந்து போட்டி

**காரைதீவு குறூப் நிருபர்**



காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகமும் அஸ்கோ அமைப்பும் இணைந்து நடாத்தும் கூடைப்பந்தாட்ட சுற்று போட்டி நாளை (6) மாலை நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் யோ. டிலக்சிகன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கு பிரதம அதிதியாக அஸ்கோ தலைவர் ஏ. விவேகானந்த ராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

இறுதி சுற்றுப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகமும் மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு கழகமும் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.சி.சி சிறந்த வீரர் தெரிவில் ஜயசூரிய



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் (ஐ.சி.சி) ஏப்ரல் மாதத்துக்கான சிறந்த வீரருக்கான பரிந்துரைப் பட்டியலில் இலங்கை டெஸ்ட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் பிரபாத் ஜயசூரிய பெயரிடப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி சார்பில் ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயல்படும் வீர, வீராங்கனைக்கு விருது வழங்கி கௌரவிக்கப் பட்டு வருகிறது. இதன்படி, கடந்த ஏப்ரல் மாதம் சிறப்பாக செயல்பட்ட மூன்று வீரர்களுக்கான பரிந்துரை பட்டியலை ஐ.சி.சி புதனன்று (03) வெளியிட்டது.

அயர்லாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் 17 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜயசூரிய அதிவேகமாக 50 விக்கெட்டுகளை வீழ்த்தியோர் வரிசையில் இரண்டாவது இடத்தை பிடித்தார்.

இதில் பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பக்கர் ஸமான் மற்றும் நியூசிலாந்தின் மார்க் சப்மனின் பெயர்களும் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

இந்த மூன்று வீரர்களில் ஒரு வீரரை வாக்கெடுப்பின் அடிப்படையில், ஏப்ரல் மாதத்துக்கான சிறந்த வீரராக ஐ.சி.சி அறிவிக்கும்.

## இலங்கை வளர்ந்துவரும் அணியில் தீசன் விதுசன்



ஜப்பானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை 23 வயதுக்கு உட்பட்ட வளர்ந்துவரும் கிரிக்கெட் குழாத்தில் யாழ்ப்பாண வீரர் தீசன் விதுசன் இடம்பிடித்துள்ளார்.

ஜப்பான் கிரிக்கெட் சபையின் அழைப்பின்படி இலங்கை கிரிக்கெட்டின் 23 வயதுக்குட்பட்ட வளர்ந்துவரும் அணி ஒன்று இம்மாதம் ஜப்பானுக்கு பயணித்து கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ளது. இதில் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் வீரரும் மூவர்ஸ் கிரிக்கெட் கழகத்தின் சுழல் பந்துவீச்சாளருமான தீசன் விதுசன் இடம்பிடித்துள்ளார்.

தீசன் விதுசன் மூவர்ஸ் கிரிக்கெட் கழக அணிக்காக 8 முதல்தர போட்டிகளில் விளையாடி 39 விக்கெட்டுகளை சாய்த்து தனது திறமையை நிரூபித்துள்ள நிலையில், இந்த குழாத்தில் இடம்பெற்றுள்ளார்.

இந்தத் தொடரில் முன்னணி கழக 23 வயதின் கீழ் தொடரில் பிரகாசித்து, தேசிய சுபர் லீக்கில் வாய்ப்பு கிடைக்காத வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 12 ஆண்டுகளின் பின் பாக். தொடர் வெற்றி



நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் 26 ஓட்டங்களால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3–0 என கைப்பற்றியது.

இதன்மூலம் நியூசிலாந்துக்கு எதிராக 12 ஆண்டுகளின் பின்னர் பாகிஸ்தான் அணி ஒருநாள் தொடர் ஒன்றை வென்றுள்ளது.

கராச்சியில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பாகிஸ்தான் 50 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 287 ஓட்டங்களை பெற்ற நிலையில் பதிலெடுத்தடிய நியூசிலாந்து அணி 261 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பாகிஸ்தான் அணி இதற்கு முன்னர் கடைசியாக 2011 ஆம் ஆண்டே நியூசிலாந்துக்கு எதிராக ஒருநாள் தொடர் ஒன்றில் வெற்றியீட்டியது. அதன் பின் நடந்த ஏழு ஒருநாள் தொடர்களில் ஆறில் தோற்றதோடு ஒரு தொடர் சமநிலையில் முடிந்தது.

## புட்டினை கொல்ல உக்ரைன் முயன்றதாகக் குற்றச்சாட்டு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை படுகொலை செய்யும் நோக்குடன், கிரம்ளின் மாளிகை மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்த உக்ரைன் முயற்சித்ததாக ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.

ரஷ்ய அரசினால் கடந்த புதன்கிழமை (03) இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதோடு இது பற்றி அந்நாட்டின் பல அரச ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதல் இடம்பெறும்போது புட்டின் கட்டடத்தில் இருக்கவில்லை என்றும் கிரம்ளினுக்கு பொருட்சேதம் ஏற்படவில்லை என்றும் ரஷ்ய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு எதிராக பதில் தாக்குதல் நடத்த உரிமை இருப்பதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். கிரம்ளின் மாளிகைக்கு மேலே பறந்துசென்ற பொருள் வெடித்துச் சிதறும் வீடியோ ஒன்றை சமூக ஊடகங்களில் பார்க்கமுடிகிறது. அதன் நம்பகத்தன்மை உறுதி செய்யப்படவில்லை. மின்னியல் ரேடார் கருவிகள் மூலம் இரண்டு ஆளில்லா விமானங்களும் செயலிழக்கச் செய்யப்பட்டதாக ரஷ்யா கூறியது. எனினும் இந்தக் குற்றச்சாட்டை உக்ரைன் மறுத்துள்ளது. ரஷ்யா கடந்த ஆண்டு உக்ரைன் மீது படையெடுத்தது. அதன் பின் ஆக்கிரமிக்கப்பட்ட தனது சொந்த வட்டாரங்களை விடுவிப்பதில் உக்ரைன் கவனம் செலுத்திவருவதாக உக்ரைனிய ஜனாதிபதியின் பேச்சாளர் கூறினார்.

## சர்வதேச செய்திகள்

# செர்பிய பாடசாலையில் 13 வயது சிறுவன் சக மாணவர்கள் எண்மரை சுட்டுக்கொலை



செர்பிய பாடசாலை ஒன்றில் பதின்ம வயது மாணவன் ஒருவன் சக மாணவர்கள் எட்டுப்பேரையும் காவல் அதிகாரி ஒருவரையும் சுட்டுக்கொன்றுள்ளார். அந்த மாணவன் கொலை பட்டியல் ஒன்றை தயாரித்து பல வாரங்கள் திட்டமிட்டு இந்த கொலைகளை செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய பல்கிரேட்டில் உள்ள விலாடிஸ்லாவ் ரிப்னிகர் ஆரம்ப பாடசாலையில் கடந்த புதன் (03) காலை இடம்பெற்ற தாக்குதலை அடுத்து 13 வயது சிறுவன் கைது செய்யப் பட்டுள்ளான்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் மேலும் ஆறு மாணவர்கள் மற்றும் ஆசிரியர் ஒருவர் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கான காரணம் பற்றி தொடர்ந்து விசாரணை நடத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டில் பிறந்த சிறுவர்களே பெரும்பான்மையாக கொல்லப்பட்டிருப்பதோடு கொல்லப்பட்டவர்களில் ஏழு சிறுமிகள் மற்றும் ஒரு சிறுவன் அடங்குகிறான்.

சட்ட அனுமதி பெற்ற தனது தந்தையின் துப்பாக்கிகளையே அந்த சிறுவன் பயன்படுத்தியுள்ளான். அந்த சிறுவன் தனது தந்தையுடன் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் துப்பாக்கி பயிற்சி இடத்திற்கு சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்த சிறுவனின் தாய் மற்றும் தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுவன் 14 வயதுக்கு கீழ்ப்பட்டவன் என்பதால் செர்பிய சட்டத்தின்படி குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்த முடியாதிருப்பதோடு, உளவியல் சிகிச்சை நிலையம் ஒன்றுக்கே அனுப்ப முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தக் கொலைகளை அடுத்து குற்றச்சாட்டு சுமத்தும் வயது 12 ஆக குறைக்கப்படக் கூடும் என்று செர்பிய ஜனாதிபதி அலெக்சாண்டர் வுசிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு இன்று (05) மூன்று நாள் தேசிய துக்க தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலக வங்கி தலைவராக அஜெங் பங்கா நியமனம்



உலக வங்கியின் புதிய தலைவராக மாஸ்டர்கார்ட் நிறுவன முன்னாள் தலைவர் அஜெங் பங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் கடனை சமாளிப்பது மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக உலக வங்கி போராடி வரும் நிலையிலேயே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனே, பங்காவை இந்தப் பதவிக்கு பரிந்துரைத்ததோடு, உலக வங்கித் தலைவராக நியமிக்கப்பட்ட முதல் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவராகவும் அவர் பதிவாகியுள்ளார்.

டேவிட் மல்பாஸின் இடத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பங்கா எதிர்வரும் ஜுன் 2ஆம் திகதி ஐந்து ஆண்டு தவணைக்காக பதவி ஏற்கவுள்ளார். இந்தியாவில் பிறந்து, படித்து, வளர்ந்த அஜய் பங்கா தற்போது அமெரிக்க பிரஜையாக உள்ளார். அவர் மாஸ்டர்கார்ட் நிறுவனத்தில் இணைவதற்கு முன்னர் நெஸ்லே மற்றும் சிட்டி குரும் நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார்.

## மூன்று பலஸ்தீனர்கள் சுட்டுக்கொலை



நப்லுஸ் நகரில் இஸ்ரேல் இராணுவம் நேற்று நடத்திய சுற்றிவளைப்பின்போது மூன்று பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதோடு மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர். இதில் கொல்லப்பட்ட இருவர் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி இஸ்ரேலிய குடியேறிகள் மூவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்று இஸ்ரேல் இராணுவம் மற்றும் உளவுச் சேவை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்போது காயமடைந்த நால்வர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கண்ணீர் புகையால் பாடசாலை சிறுவர்கள் உட்பட குறைந்தது 150 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையில் நப்லுஸ் அரசியல் தரப்புகள் நேற்று பொது வேலைநிறுத்தம் ஒன்றை அறிவித்தன.

## புதிய 'அல்சைமர்' மருந்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்



அல்சைமர் நோய்க்கான பரிசோதனை மருந்து ஒன்று அந்த நோயுடன் தொடர்புடைய அறிவாற்றல் மற்றும் செயற்பாட்டு சரிவை கணிசமான அளவில் குறைப்பதாக குறிப்பிட்டிருக்கும் நிபுணர்கள் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றும் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த மருந்து சில நோயாளர்களுக்கு தீவிர பக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அல்சைமர் நோயின் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் சுமார் 1200 பேரிடம் பிந்திய கட்ட சோதனையாக பயன்படுத்தப்பட்ட டொனனெமாப் என்ற இந்த மருந்து, மருந்துப் போலி ஒன்றுடன் ஒப்பிடுகையில் 18 மாத காலத்தில் நோய் அறிகுறிகளின் முன்னேற்றத்தை 35 வீதத்தால் குறைத்திருப்பதாக அமெரிக்க மருந்து உற்பத்தி நிறுவனமான எலி லில்லி தெரிவித்துள்ளது. எனினும் இரு தன்னார்வலர்கள் மற்றும் சாத்தியமான மூன்றாமவர் மூளையில் ஏற்பட்ட அபாயகரமான வீக்கத்தால் உயிரிழந்துள்ளனர்.

அல்சைமர் நோய் நரம்பியல் சிதைவுகளால் ஏற்படும், மெதுவாக ஆரம்பித்து, நாட்கள் செல்கையில் மோசமான நிலைமைக்கு நகரும் ஒரு நாட்பட்ட நோயாகும்.

## ஆர்.எஸ்.வி வைரஸுக்கு முதல் தடுப்பூசி தயார்



அமெரிக்க உணவு மருந்து நிர்வாக அமைப்பு ஆர்.எஸ்.வி எனும் சுவாசக் குழாய்க் கிருமியின் தடுப்பு மருந்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. பல்லாண்டு ஆராய்ச்சிக்குப் பின் தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆர்.எஸ்.வி வைரஸை கட்டுப்படுத்த உலகில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள முதல் தடுப்பூசி இதுவாகும். மருந்தாக்க நிறுவனமான ஜி.எஸ்.கே., அரெக்ஸ்–வை தடுப்பு மருந்தைத் தயாரித்துள்ளது.

60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோர் ஒரேமுறை ஆர்.எஸ்.வி தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம்.

ஆர்;.எஸ்.வி வைரஸ் சளி போன்ற இலேசான அறிகுறிகளை ஏற்படுத்தக்கூடியது என்றபோதும் குழந்தைகளுக்கும் மூத்தவர்களுக்கும் அது கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம். நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களுக்கும் வேறு மருத்துவப் பிரச்சினை உள்ளவர்களுக்கும் ஆர்.எஸ்.வி மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் சுமார் 13,000 பேரின் மரணத்துக்குக் காரணமாக ஆர்.எஸ்.வி வைரஸ் உள்ளது. அதன் அடுத்த பருவத்துக்குள் தடுப்பு மருந்து விற்பனைக்குத் தயாராகிவிடும் என்று ஜி.எஸ்.கே நிறுவனம் எதிர்பார்க்கிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.